# ஞானபோதினி.

ஸம்புடம். III. | 1900ளு ஜனவரிமீ 20உ. | புத்தகம் 6.

## இராஜ விசுவாசம்.

ஆங்கிலேயர் இந்தியாவிற் கால்வைத்து ஏறக்குறைய மூன்று நூற்றுண்டாகின்றன. முதலில் அவர்கள் வாணிபஞ் செய்யவந்தனர் என்பதும் பின்னர் இந்தியாவிலுள்ள வளப்பெருக்கால் நாடுபெற நாடினரென்பதும் சரித்திரங்கூறும். சென்ற நூற்றைம்பது வருடங்கட்கு முன்வரையிலும் பிராஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேய வர்த்தகர்கட்கும் ஓயாத சண்டைகள் நடந்துவந்தன. கடைசியாய் வந்தவாசியில் நடந்த சண்டையிற் பிராஞ்சுக்காரர் முறிபடவே ஆங்கிலேய கம்பெனியாருக்கு இந்தியாவைக் கைக்கொள்ள முயலலாமென்ற எண்ணம் உறுதிப்பட்டது. அவர்கள் மகம்மதியரை இலகுவாய் வென்றபோதிலும் மாராட்டியரைத் தோற்கடிக்க ஐம்பது வருடங்கட்கு மேற்சென்றது. இந்தப் பத்தொன்பதாம் நூற்றுண்டின் துவக்கத்தில் அவர்களும் சலித்துப்போயினபடியால் கம்பெனியாருடைய ஆளுகைவலுத்தது. 1858-ம் ளுவரையிலும் கம்பெனியாரே இத்தேசத்தை ஆண்டுவந்து, படைச்சேவகர் கலகஞ் செய்தபின்னர் மகிமைதங்கிய - இந்தியச் சக்ரவர்த்தினியென்று பின் கௌரவம்பெற்ற-மாதரசியின் செங்கோலுக்கு உட்படுத்தினர். அதுமுதற் சென்ற 1897-ஆம் வருடம் வரையிலும், அதாவது நாற்பது சம்வற்சரங்களிலும், இந்தியாவிற் பெரிய குழப்பங்கள் நேரிடவாவது ஜனங்களுடைய உயிர் பொன் பொருள்களுக்கு அழிவு நேரிடவாவது இல்லை. நாளுக்கு நாள் கல்வி நாகரீக விருத்தியும் சுகமும் இராஜ விசுவாசமும் ஓங்கிவந்தன. பம்பாய் இராஜதானியில் முக்கியமாய்ப் பூனவில், கொள்ளைநோய்வந்துற்ற நாள்முதற் குடிக்கும் இறைக்கும் ஐக்கிய வேறுபாடானதாகத் தெரிகிறது. இவ்வேற்றுமைக்குக் காரணம் பக்ஷபாதமில்லாமல் ஊன்றிப்பார்ச்கு மனைவருக்கும் காலவேற்றுமை பொ

ன்றேயொழிய வேறில்லை என்பது கரதலாமலகம்போல் விளங்கும். மற்றை யுபகாரணங்களைச் சற்று விரித்துரைப்பாம்.

ஆங்கிலேய அரசாட்சியினாரம்பத்தில் இந்தியாவிற்குவந்த துரைமார்கள் தூரதேசத்தில் தங்களினங்களை விட்டு அன்னியர்மத்தியில் வந்திருந்தபடியால் நாட்டு ஜனங்களுடன் ஊடாடி அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களை அறிந்து நீதிசெலுத்தின ரென்றும் அதற்கு முக்கிய காரணம் அன்னார் பெரியகுடும்பத்தின ரென்றும் உயர்குலத்தினரென்றும் சொல்லுவது வழக்கம். அஃது ஒருவாறு உண்மையே. ஏனென்றால் தயாளமும் ஜீவகாருண்யமும் உயர்ந்தோர் மாட்டேயுள. இழிகுலத்தினர் கல்வி எத்துணை கற்பினும் பெருந்தன்மை கொண்டொழுகுதல் பிரயாசம். பெரியோர் சிறியோர் என்றவித்தியாசம் அன்னார் உணருகின்றிலர். குடிகள் போய்த் தங்கள் குறைகளைச்சொன்னாற் காதுகொடார்; தங்களுடைய முன்னிலைமையை நினைக்கின்றிலர்; "முந்திரிமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை, யிந்திரனா வெண்ணி விடும்" என்றபடி தங்களை இந்திரராய் மதித்தொழுகுகின்றனர். இலக்ஷ்மி யிருக்கிறவரையிலும் காலஞ்செல்கின்றது; இராகுதசை வந்தடைந்தால் அவர்களுக்குப் பிறர்கஷ்டமும் மானுடவாழ்க்கைத் தொல்லைகளும், கீழ்ப்பட்ட குடிகளின் துன்பங்களும் மனத்திற் படுகின்றன. "சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற், கொல்லப் பயன்படுங் கீழ்" என்றார் நாயனாரும்.

ஆங்கிலேயர் புதிதாய் இந்தியாவிற்கு வந்தகாலத்தில் அவர்களுக்கு இந்தத் தேசத்தினுள்ளார் செய்த மரியாதையைப் போன்று இராஜபாஷை பரவிய இக்காலத்திலுள்ள இந்தியர்கள் செய்யவில்லை என்ற வயிற்றெரிச்சல் ஒருபக்கம்; இந்தியர்களும் அவர்களைப்போன்று பன்னூல்களையும் பயின்று ஆங்கிலச் சோதனைகளில் உயர்ந்த கௌரவம்பெற்று அவர்கள் வகித்துவரும் உன்னத ஸ்தானங்களைப்பெற்று வருவதனால் அவர்களுடைய உண்டிக்கிடையூறாய் வந்து விட்டனரே யென்ற மனவருத்தம் ஒருபக்கம்; மேற்றிசைப் படிப்பால் நாடாளுகையின் குற்றங்களை யுணர்ந்து தங்கள் குறைகளை நீக்கும்பொருட்டு ஆங்காங்குச் சபைகூடித் துரைத்தனச் சிறுமைகளை இங்கிலாந்திலுள்ள சுதேசிகளறியக் கூறுகின்றனரே யென்ற துயரம் மற்றொருபக்கம்; அன்னார் கூறுங்

கூற்றுக்களை யெல்லாம் இந்தியர்கள் ஆங்கிலத்திலும் சுதேசபாஷை களிலும் உலகமெங்குமுளார் உணரும்படி வரைந்து வெளியிடும் பத்திரிகைகளை நிறுத்தல் அசாத்தியமாய் விட்டதே என்ற மனப் புழுக்கம் வேறொரு பக்கம். இத்தகைய வெப்பங்கொண்ட ஆங்கி லேயர் மட்டுமே, இந்தியர் துரோகிகள், சுய ஆளுகைக்குரியரல் லர், மேற்றிசைக் கல்விபடிப்பித்தது பெருந்தவறு, ஆகையால் இனி, அதற்குரிய உதவியைத் துரைத்தனத்தார் நிறுத்தவேண்டும், எனப் பலவாறாகப் பிதற்றுவர். ஆனால் இந்தியர்களுடன் ஊடா டுந் துரைமக்கள் இந்தியரைப்பற்றிச் சிறிதும் சிறுமை சொல் லத் துணியார். லார்ட் ரிப்பனைப்பற்றி இந்தியரெவரேனுங் குறை கூறியதை யாம் கேட்டிலம். அவரும் ஆங்கிலேய துரைமகனார் தாமே.

ஊரும் புழுவும் மிதித்தாற் கடிக்கும். வறுமை யறியாது மேலோர் பெருமையை. குக்ஷிவாதை பக்ஷத்தைக் கெடுக்கும். ஆதலின் எந்த நாட்டிலும் இராஜ விசுவாசம் ஓங்கவேண்டுமென் றால் இறைமகன் குடிகளின் வறுமையை நீக்கவேண்டும்; அவர் கள் அதிருப்திப்படவிடங் கொடாதிருத்தல் வேண்டும், அவர்கள் உயிருக்கும் பொருளுக்கும் சேதம் வாராமற் காத்தல்வேண்டும்; சுயநயத்தையும் பெருமையையும் பாராட்டாமற் ‘குடியுயரக்கோனு யரும்’ என்ற கொள்கையைச் சிரமேற் கொள்ளவேண்டும்; குடிக ளுடைய மதத்தைத் தம்மதம்போற் பார்க்கவேண்டும்; அவர்களு டைய க்ஷேமத்தைக் கருதிக்குறைந்த பகுதிப்பணம் கொள்ளல் வேண்டும். இத்தகைய பொதுநியாயங்களைக் கவனியாத பக்ஷத் திற் “கொடுங்கோன் மன்னர் வாழும் நாட்டிற், கடும்புலி வாழுங் காடு நன்றே” என்றேகுவர் குடிகள். “கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியுங், கோணிலை திரியின் மாரிவறங் கூரு, மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை, மன்னுயிரெல்லா மண்ணாள் வேந்தன், றன் னுயி ரென்னுந் தகுதியின் றாகும்” என்றார் மணிமேகலையினும்,

1877-ஆம் வருடத்தில் இந்தியாவைச் சுற்றிப்பார்க்க வந்தமேற் றிசை உயர்குல நிபுணர் ஒருவர் சுயதேசஞ் சேர்ந்தபின்னர் அவரு டைய இனத்தார் இந்தியாவைப்பற்றிப் பலவினாக்கள் எழுப்பியதில் ஒன்றாகிய இந்தியர் எத்தன்மையுடையர் என்பதற்கு அவர் “வங்

காள தேசத்திலுள்ளார் நமக்குறவினராவர், பம்பாய் இராஜதானியிலுள்ளார் நமக்கு நண்பராவர், சென்னை இராஜதானியிலுள்ளார் நம்மைச்சுற்றி வாலைக்குழைக்கும் ஞமலிகளாவர்'' என்ற மறுமொழிகொடுத்ததாய் யாம் சிறு பிராயத்திலே கேள்விப்பட்டனம். இவ்விடையை நன்முய்க் கவனிக்குமளவில், சென்னை இராஜதானியிலுள்ளார்க்கு இரண்டு விசேடகுணங்கள் ஏற்படுகின்றன. அவையாவன கீழ்ப்படிதல், விசுவாச முடைமை. இஃதிப்படியிருக்க இந்தியாவின் இப்பகுதியிலுள்ளவர்களுடைய கீழ்ப்படிதலையும் விசுவாசத்தையும் பற்றி ஐயமுறுதல் எங்ஙனம் துரைத்தனத் தாருக்குத்தகும்? ஐயப்படாவிடின் லௌகிக பௌதிக விஷயங்களிற் சிறப்புற்ரேங்காத ஏழைப்போதகாசிரியர்கள் இராஜாங்க விஷயமாய்ப் பேசுஞ்சபைகளிலும் குழாங்களிலு மிருக்கவுங் கூடாது, வாயைத் திறக்கவுங் கூடாது என்ற உத்தரவு பிறத்தற்கு நியாயமென்னை? காலக்கொடுமையே யன்றி வேறிலது.

நியாயமும் காருண்யமும் துரைத்தனத்தின் தூண்கள். நியாயங்குன்றினும் காருண்யங்குன்றலாகாது. குலைக்கிற நாய்க்குக் கருப்பங்கட்டி போட்டாற் குலைக்குமோ? பசிகடுத்தாற் பரமனென்றும் பாமரனென்றும் பார்ப்பாருளரோ? தன்னுயிர்போல் மன்னுயிர் காத்தல் தலையே யன்றோ? பகைஞரிருவர் பன்னாட்பிணங்கினும் பரிந்து போஜனம் பகர்ந்தால் அன்னார் பிணக்குத் தீருதல் வழக்கன்றோ? பசி தீர்ந்தபின் பகைஞருமுளரோ? ஆதலினால் இராஜகாரியங்களை நடத்தும் விவேகிகள் முக்கியமாய்ச் சிந்திக்க வேண்டியது குடிகளின் க்ஷேமம். அதை நீக்கிச் சுயநயத்தைமட்டுங் கருதுவோர் 'விலங்கொடு மக்களனையர்'. குடிகளின் க்ஷேமத்தை நாடும் உத்தியோகஸ்தர்களை ஜனங்கள் ஒருபொழுதும் மறப்பதில்லை. இவ்விராஜதானியிலுள்ள பல ஜில்லாக்களிலும் ஜனங்களுக்கு ஏதேனும் நன்மைசெய்தவர் பெயர் மறவாமலிருக்கும்பொருட்டுக் கட்டிய பாலங்கள், கோரிகள், வாசகசாலைகள், பள்ளிச்சாலைகள், புண்ணியசாலைகள் முதலான நன்றியறிதல் விளக்குங் கட்டிடங்களெத்தனையோ இருக்கின்றன வன்றோ?

தவிரவும், என்னாணை என்மேற் பக்ஷமாயிருவெனல் யார் சொல்வது? எத்தனை நாள் நடக்கும்? செங்கோலே செங்கோலஞ் செயும்.

அன்றியும், இந்தியர்கள் நாகரீகமுள்ள ஆங்கிலேயருடைய ஆட்சிக்குட்பட்டவர்களாதலால் அவர்களுக்கு இராஜ விசுவாசங் குறைய ஏதுவில்லை. வலியுடையான் ஒருவன் நம் சிகையைப் பிடித்திருக்க வலியிலாத நாம் தும்மினல் நம் தலையன்றி யார் தலைநோவும்? இஃது எவரும் அறிந்த விஷயமே. பரமேபெரிது என்று நினைக்கும் இந்தியர் இவ்வுலகவதிகாரத்தைக் கருதுபவரல்லர். அவர்கள் லௌகிக உயர்வைப்பெற இன்னும் தலைமுறை அனேகங் கழியவேண்டும்,

தற்காலத்தில் தென் ஆபிரிக்காவில் யுத்தம் நடப்பது எவருக்குந்தெரிந்த விஷயம். இதில், இதுவரை சரித்திரத்தில் வரையப்பட்டிருக்கும் பெரும்பான்மை யுத்தங்களில் மாண்டவரின் தொகையைப்பார்க்கிலும் அதிக உயிர்ச்சேதம் நேரிட்டிருக்கிறது. நாளதுவரை இந்த யுத்தத்திற் பிரிட்டிஷார் பக்கத்திற் கொல்லப்பட்டவர் 1027, காயப்பட்டவர் 3675, சிறைப்படுத்தப்பட்டவர் 2511, ஆகமொத்தம் 7213. இன்னும் யுத்தம் ஓயவில்லை. பலமான சண்டை இனிமேற்றான் நடக்கப்போகிறது. ஏனென்றால் ஆப்கனிஸ்தானிலும் ஆபிரிக்காவிலும் யுத்தத்திற் கீர்த்திபெற்ற லார்டு ராபர்ட்ஸ், கிச்சனர் என்ற இரண்டு கடும்புலிகள் ஏராளமான இராணுவத்துடன் ஆபிரிக்காவிற்குப் போயிருக்கின்றன. இவர்கள் போவர்களைத் தொம்சஞ்செய்து வெற்றிபெறுவரென்று எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றார்கள். "எண்ணித் துணிககருமந் துணிந்தபின் எண்ணுவமேன்பதிழுக்கு.'' இதுகாறும் பிரிட்டிஷாருடைய பெயருங் கீர்த்தியும் உலகமெங்கும் பிரசித்தம் அப்பெயரும் கீர்த்தியும் குன்றுதபடி இந்தியர்கள் தங்களாற் கூடியவரை பொருளுதவிசெய்து வருகின்றார்களென்பதை அன்றன்று வெளிப்படும் பத்திரிகைகளிற் காணலாம். நிஜாம் ஒருவரே பெருந்தொகை யளித்திருக்கின்றனர். இராஜ விசுவாசமில்லாவிட்டால் இந்தக்கொடிய பஞ்சகாலத்திற் சுதேசிகள் உணவின்றி மரிப்பதைப்பார்த்தும் இந்தியர்கள், அன்னியதேசத்தில் நடக்கும் யுத்தத்திற்குத் துரைத்தனத்தார் வேண்டுதலின்றிப் பணவுதவி புரிவார்களா? இதுநிற்க.

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆளுகை நூறுவருடம் பூர்ணமாகிறதென்றும், இந்தியாவை நூற்றாண்டிற்கு மேல் ஆண்ட ஜாதி

யாரில்லை யென்றும், இன்னும் பலவாறாக அஞ்ஞானம் நிறைந்த ஆத்துமாக்களின் பிதற்றல் துரைத்தனத்தார் செவிகளிற் படவே அவர்கள் இந்தியர்களை நம்புதலொண்ணாது என்ற அநுபவவிரோத மான கொள்கையை மேற்கொண்டு ஒழுகுகின்றனர் போலும்! மகம்மதியர் எண்ணூறு வருடங்கள் வரை துரைத்தனஞ் செலுத் தவில்லையா? அவர்கள் காலத்தில் இந்தியருக்கு வரி விஷயத்தில் தாக்ஷணிய மிருந்தபோதிலும் மதவிஷயத்திலும் சுயாதீனத்திலும் இடர்ப்பாடுகள் எத்தனையோ இருந்தனவன்றோ? இவ்விடர்ப்பாடு கள் ஒன்றும் நமக்கு இழையாமலும், கல்வியையும் நாகரீகத்தையும் தவிக்குங் குழவிகளுக்கு அன்னை போன் றுதவிவரும் பிரிட்டி ஷாருக்குக் கேடென்னுவாரு முளரோ? அபத்தம்! அபத்தம்!! கெடுவார் கேடு நினைப்பார். குறைகளில்லாத துரைத்தனம் கி டையாது. குறைகளை நிவிர்த்திசெய்தற்பொருட்டுத் துரைத்தனத் தாருங் குடிகளின் காரியஸ்தர்களும் அடிக்கடி கூடிப்பேச வேண்டும். அங்ஙனஞ் செய்யின் குடிகளின் மன வெப்பந்தீரும்; ஐக்கியம் அதிகரிக்கும். சத்திரமிடாதபுண் உட்கண்வைக்கும் என்பது அநுபவமன்றோ?

உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து,

கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும்.

பூர்ணலிங்கம் பிள்ளை.

---

## ஆட்போக்கி.

---

இப்பெயரிய தலம் தேவாரம்பெற்ற தலங்களினொன்றாய் விளங்குவது. இதற்குத்தேவாரம் அருளிச்செய்தார் திருநாவுக் கரசு சுவாமிகள் ஒருவரே. அவர் அருளிச்செய்த தேவாரப்பாசு ரங்களானும், வேறு பதிகத்தில் இத்தலத்தைச் சுட்டலானும் அவ ரது அபிப்பிராயம் இத்தலம் ஆட்போக்கி யென்றே வழங்கல் வேண்டுமெனத்தோன்றும். ஆயினும் இருவிதமாகத் திரிக்கப்படும் திருவாட்போக்கி யென்னும் பிரயோகத்தைப் பிழைபடுநெறியில்

வாட்போக்கி யென்றே யிருத்தல் வேண்டுமென்று துணிந்து அவ்வாறே வழங்குவாராயினர் பிற்காலத்தார். அது பிழைபடு நெறியாமாறு : தேவாரத்துத் தலத்தைக் குறிக்கும் வரிகள்

ஆல நீழல் அமர்ந்த வாட் போக்கியார்
அடுத்த கின்னரங் கேட்கும் வாட் போக்கியை
அந்தி யின்னொளி தாங்கும் வாட் போக்கியார்
ஆற்ற வும்மருள் செய்யும் வாட் போக்கிபால்
ஆறு செஞ்சடை வைத்த வாட் போக்கியார்
ஆனஞ் சாடி யுகந்த வாட் போக்கியார்
ஆர்த்த கங்கை யடக்கும் வாட் போக்கியார்
ஆடல் பாட லுகந்த வாட் போக்கியை
அட்ட மாமலர் சூடும் வாட் போக்கியார்
அரக்க னுக்கருள் செய்த வாட் போக்கியார்

எனவரும். இவற்றுள் தலப்பெயர் வாட் போக்கியெனக் கொள்வோமாயின் ஐந்து வரிகள் மோனை பிழைக்கின்றன. ஆட்போக்கியெனின் பிழைக்குமாறு ஒன்றுமில்லை. தேவாரபடனஞ் செய்வோரும் பதிப்பாசிரியர்களும் வகரவுடம்படு மெய்யை யவ்வாறு கொள்ளாது தலப்பெயர் முதலெழுத்தெனக்கொண்டமை பரிதபிக்கத்தக்கதே. மோனைபிழைக்கும் வரிகளிலும் மகரத்தின்மேல் வந்த வொற்றுப்புள்ளியைக் களைந்து உடன் அடுத்துவரும் வகரத்தையுங் களையின் வரிகள் ஒழுங்காகின்றன. இனித்திருவாலம்பொழில் என்னுந் தலத்தேவாரத்தும்

"ஆரமுதா மணிதில்லைக் கூத்தன்றன்னை
வாட்போக் கியம்மானை யெம்மானென்று"

என்னும் வரிகள் காணப்படுகின்றன. இவ்விடத்து வாட்போக்கியென்பது ஆட்போக்கி யென்றிருத்தல் வேண்டும், ஏனென்றால் மோனைபிழைக்கின்றது. மற்றவரிகள் எவ்வாறிருக்கின்றனவென்றறியும் பொருட்டுப் பாசுரமுழுதும் நோக்குவோம்.

"பார்முழுதாய்விசும்பாகிப் பாதாளமாம்
பரம்பரனைச் சுரும்பமருங் குழலாள்பாகத்
தார்முதா மணிதில்லைக் கூத்தன் றன்னை
(யா) வாட்போக்கியம்மானை யெம்மானென்று

வாரமதா மடியார்க்கு வாரமாகி
வஞ்சனைசெய் வார்க்கென்றும் வஞ்சனாகுஞ்
சீரரசைத் தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்திநெஞ்சே."

இதனுள் மட்டுமே மோனை பிழையாதாயிற் றென்று கோடல்வேண்டுவதில்லை. பசுகரணங்க ளெல்லாம் சிவகரணமாய் நிகழப்பெற்ற உண்மை ஞானியாகிய வாகீசப்பெருமானது அருள் வாக்கிற் பிறந்த பாசுரங்களில் மோனையில்லாதன காண்டல் மிக அரிது, ஆதலின் இவ்வாறு பலவரிகளையும் மோனை பிழைப்பதறியாமை வழங்கல் பெரியதோர் இழுக்கேயாகும். பதிகம் பெற்றதலப்பெயர்களைக் காட்டுஞ் சில விருத்தங்கள் வழங்கிவருகின்றன. ஆங்கும் திருவாட் போக்கியென ஒருதலை துணியாது தலப்பெயர் கூறப்பட்டிருக்கின்றது.

மற்றுச் சிவதலமான்மியச்சுருக்கம் என்றொரு நூலகத்து இத்தலத்தினது மான்மியம் விளக்கப்பட்டிருக்கின்றது. ஆரிய வரசனொருவன் மணிவிருப்பாற் றலங்தோறுந் திரிந்தெய்த்து இத்தலங்குறுகிவழிபட, சிவபிரான் நீர்த்தொட்டியொன்று காட்டி யதனைக்காவிரி நீரால் நிரப்பி யுன்குறை முடித்துக்கொள்க வென்றுஞ்ஞாபித்தார். அரசன் நீரெல்லாந் தொட்டியுண்டு வெறுமையாத் தோற்றல் கண்டு சினந்து உடைவாளை யோச்ச நினைந்தான். அக்கணத்தே வாண்மறைந்து மணிபுறப்பட்டது. இவ்வற்புதங் கண்ட அரசன் மணியின் மேற்பற்று விட்டுச் சிவபணிவிடை புரிந்து கதியடைந்தான். இக்கதையின் ஆதாரத்தைக் கொண்டு வாட்போக்கியே சிறந்த பிரயோகமென்று சாதித்தல் கூடும். ஆயினு மிது கதையே ஆட்போக்கி யென்னும் பிரயோகத்திற் கேற்பவு மிதனைத் திரித்தல் எளிது. திருநாவுக் கரசு சுவாமிகள் கருத்து ஆட்போக்கியே யென முன்னர் நன்கு காட்டப்பட்டது. ஆகலின் வாட்போக்கியென்பது பிழையே, ஆட்போக்கி யென்பது வழக்கே.

அனவரத விநாயகம்பிள்ளை.

---

# பேகனார் சிற்றுரை.

## IV-வது. பகை தீர்த்துக்கொள்ளல்.

(அதாவது:—தமக்குத்தீங்கு செய்தார்க்குப் பதில் தீங்குசெய்யவிரும்புதல்.)

பகை தீர்த்துக்கொள்ள ஒருவன் பார்ப்பது முரட்டுத்தனத்திற் சேர்ந்தது. இதை எவ்வளவுக்கு எவ்வளவு ஒருவன் விரும்புகிறனே, அவ்வளவுக்கு அவ்வளவு துரைத்தன வதிகாரிகள் அவனை அடக்கவேண்டும். முதல் முதல் தீங்கு இழைத்தவனால் துரைத்தன ஆணைக்கு விரோதம் செய்யப்பட்டது, அதற்காகப் பகைவைத்துப் பதில் தண்டனை செய்யத் தானே புறப்படுகிறவனால் துரைத்தன ஆணைக்கு விரோதம் நடப்பதுடன் துரைத்தனமே கலைய வேண்டியதாகிறது. அடைந்ததீங்கைக் கவனிப்பதனால் இழைத்தவன், அடைந்தவன், இருவர்க்குள் ஏற்றத்தாழ்ச்சி இல்லாமற் போகிறது; கவனிக்காவிடின், கேடு அடைந்தவன் மற்றையவனிலும் கவுரவ நெஞ்சினன் ஆகிறான். 'பிழை பொறுப்பான் மன்னனாவான்' என்றார் ஸாலொமன். பிழையை மன்னிக்கிற தென்றால், எவ்வளவு நற்புத்தி உள்ளத்தில் சேர்ந்து ஆகவேண்டியது; மன்னிக்கும் புத்தி இலகுவில் வராதே.

நடந்துபோனது எப்போதும் கழிவுதான், மீளாதது; நிகழ்வதும் நிகழப்போகிறதுமான இரண்டு சல்லியமே வேண்டியதிருக்க, அறிவுடையோர் கழிந்ததைப்பற்றிக் கவலைப்படுவது வீண் காரியம் எனக், கழிந்ததை நினையாது விடுவர். பிரயோசனம் ஒன்று நாடாது தீங்கு இழைப்பதையே கருதித் தீங்கு இழைப்பவர் கிடையாது, ஏதோ பொருட்பயனோ, உவப்போ, பெருமையோ, இப்பேர்ப்பட்ட மற்ற எதுவோ, அடையக்கருதியே, முதல் முதலில் தீங்கு இழைப்பர். அவ்வாறு கருதி நமக்குத்தீங்கு இழைத்தவனிடத்தில் நமக்கு ஏன் சண்டை? நம்மைவிடத் தன்காரியத்தில் அவன் கருத்து வைத்தது சகஜந்தானே. யாராவது துஷ்ட குணம் இயல்பாய்ப் பெற்றுத்தீங்கு இழைப்பரேல், அவர் முட்செடிகளுக்கும் முள்ளுக்கும் ஒப்பாவர். ஏனெனில் அவற்றிற்குக் குத்தத்தான்தெரியும், அதனிலும் சிறந்தவேலை தெரியாது.

எந்தெந்தத்தீங்குக்குத் துரைத்தனத்தார் ஏற்படுத்திய நீதிமுறையிற் பரிகாரம் அடைய வழியில்லையோ, அப்பேர்ப்பட்ட தீங்கு அடைந்தவன், பதில் தீங்கு செய்ய, யத்தனிப்பது ஒருவாறு ஒப்புதலாம்; அப்போதுகூட, பதில் தீங்கு செய்ய நினைப்பது துரைத்தனத்தார் தண்டனைக்குள் அகப்படாததாயிருக்க வேண்டும், அகப்பட்டதாயின் இவர்க்கு எதிரி முன்னர் ஒருவரே இருந்தது போக, இப்பொழுது எதிரி இருவர் ஏற்படுத்திக் கொண்டவராவர்.

பகை தீர்ப்பார் சிலர் தம்மால் நடந்ததென எதிரி அறிய விரும்புவர். இவர்க்குப் பதில்தீங்கு இழைப்பதே பிரதானமாயிராது, முதல்முதலில் தீங்கு இழைத்தார் அறிந்து மனவேதனைப் படவேண்டு மென்ற நினைப்பு இருக்கிறபடியினால், இதனை ஒரு பக்ஷம் ஏற்கலாம். எதிரி அறியாமல் எதிரிக்குத்தீங்கு இழைக்கப்பார்த்தலில் பயங்கொள்ளித்தனமுண்டு, இருட்டில் அகப்பட்டவனை இருட்டு மறைவிற் குத்துகிற பழிசேரும்.

நண்பு பாராட்டி மோசக்கருத்து வைத்திருப்பதையும், நட்பைப்பேணுதிருத்தலையும் தீராப்பாவமென எண்ணின ப்ளாரென்ஸுக்கு ட்யூக்ப்பிரபுவான காஸ்மஸ் என்ன சொல்கிறார்: "வேதாகமத்தில் எதிரியை மன்னிக்கச் சொல்லிக் கட்டளை பிறந்திருக்கிறதே யொழிய, கூட்டாளியை மன்னிக்கும்படி வேதாகமங்களில் ஆணைகிடையாது". இவ்வளவு கடுமையாய் காஸ்மஸ் நவின்றாரே, ஜோப்புக்கு அவ்வளவு கடுமை பிறக்கவில்லை. ஜோப் சொன்னதாவது "கடவுளால் அமைத்த நன்மைகளை அடைகிற நாம், தீமைகளையும் பொறச்சம்மதிக்க வேண்டியவர்களாகிறோம்". அப்படியே, நம்மிணக்கம் பெற்றார்களில், நல்லோர், தீயோர் கலந்திருப்பதனால், தக்கபடி பார்த்து இணங்கவேண்டும். ஒன்று உண்டு, தாம் அடைந்த தீங்கை நினைந்து வெம்புருவார், தாம் பெற்ற புண் ஆறாது புண்ணாகவே இருக்கப்பார்ப்பவரை ஒப்பர். அதனை மறப்பரேல், புண் ஆறி நீங்குமல்லவா?

ஊர்ப்பகை தீர்க்கத்துணிந்தார் வெகுவாய்க் காரியத்தை ஜெயித்தனர். ஸீஸரைக் கொலைசெய்தது, பெர்டினக்ஸைக் கொலைசெய்தது, ப்ரான்ஸில் 3-வது ஹென்ரியைக் கொலைசெய்தது, இப்படிப்பட்ட கொலைகள் இன்னும் எத்தனையோ, அக்கொலைகளால் நினைத்த காரியங்கள் முடிந்தன. அப்படியன்று, சொந்தக்காரியங்களிற் பகை தீர்த்துக்கொள்ளப் பார்ப்பாருடைய கருத்து, இவர்களும் சூன்ய மந்திரம் செய்வாரும் ஒரேதினுசிற் சேர்வர். இவ்விருதரத்தார் நோக்கமும் கொடியன, அவர்கள் வாழ்வும் துன்புறும்.

## V-வது. வறுமை.

துறவறம் ஏற்ற ஸ்டோயிக்ஸ் இனத்தினர் வழிப்படி, ஸெநேகா திறமையாய் உரைத்ததாவது: "செல்வத்தாற் கிடைக்கும் நன்மைகளைப்பார்த்து அவற்றைநாம் அடையலாகாதா, என்று ஆசை உண்டாம், வறுமையில் விளங்கும் நற்குணங்களைப்பார்த்து நம்மிடத்தில் மதிப்பு உண்டாம்.' இயற்கைவிட்டு விலகிய கிரியாசித்தியைப்பார்க்க எப்படி ஆச்சரியமாயிருக்கிறதோ, அப்படியே, வறுமையில் செம்மையைப் பார்க்க ஆச்சரியமாயிருக்கும். ஸெநேகா இன்னும் திறமாய் உரைத்ததாவது, (கிறிஸ்தவச் சமயவறிவுபெறாதவர் இவ்வளவு அறிந்தது விசேஷம் தானே):—"எளிதிற் கலையும் உடலில், தெய்வப்பிறப்புக்கு உள்ள மனவலிமை இருத்தல் பெரியவிசேஷம்." இவ்வாறு செய்

யுளில் நவின்றுற் பொருந்தும் உலக இயற்கையினும் மிக்க கற்பனை நவிலும் செய்யுளர், இக்கருத்தை மறைத்து விளம்புவர், பூர்வீகக்கவிஞர் விநோதமான கதை ஒன்றுசொல்வர். இதனுற் கிறிஸ்தவர்க்கு இருக்கவேண்டிய குணம் விளங்கும். அதாவது, ப்ராமதீயஸை அவிழ்க்க ஹெர்க்குலிஸ் செல்லுகையில் மட்கலத்தில் உட்கார்ந்து அகன்ற கடலைக் கடந்தாராம், ப்ராமதீயஸ் என்றுல் மானிட இயல்பு எனப்பொருள், ஓயாஅலை அடிக்கும்வாழ்வு என்னும் கடலை, எளிதில் அழியத்தக்க உயிரைக்கொண்டு, கிறிஸ்தவரிடத்தில் இருக்கவேண்டிய மனஉறுதியை இக்கதையினுல் விளக்கினர்.

இப்படி ஏற்றி மொழிவது கிடக்கட்டும், செல்வத்தில் விளங்கவேண்டுவது மிதமிஞ்சா நடத்தை, வறுமையிலும் சிறுமையிலும் விளங்கவேண்டுவது, மனந்தளராமை, மிதமிஞ்சாத்தன்மையினும் மனந்தளராமையே நூலறிவுடையோர் சிறந்தது என்பர். கிறிஸ்தவவேதத்திற் பழைய பகுதியில் விளங்குவது செல்வமும், புதிய பகுதியில்விளங்குவது சிறுமையுமாம். இப்படிக்கிருந்தும், புதியபகுதியால் நாம்பெற்ற நற்கதிசிறந்தது, கடவுளது கருணைவிளக்கத்தின் தெளிவு புதிய பகுதியில் ஜாஸ்தி. பழைய பகுதியிற்கூட தாவிதர் பாக்களைக் கவனித்தால், உவப்பு உரை எத்தனையோ, தவிப்புரையும் அத்தனை காணலாம். ஸாலோமனர் கொண்டாட்டங்களைக் காட்டியதைவிட, ஜோபருடையதுயரங்களை உரைத்தற்குப் பழையவேதத்திற் பரிசுத்த ஆவிஜாஸ்தியாய் முயன்றது. செல்வத்தில் நடுக்கங்களும் துயரங்களும் எப்படி உண்டோ, அப்படி வறுமையில் ஆசைகளும், மனந்தேறுவதற்கு நியாயங்களும் உண்டு. தையலாற் சித்திரவேலை செய்வதில், கீழ் ஆதாரத்துணியின்வர்ணம் ஒக்க விளக்கமாம்; கறுப்பாயிருக்க, அதன்மேற் சித்திரம் எழுதுவது உவப்பை விளக்கும் சிவப்பு வர்ணமாயிருந்தால், சித்திரத்துணி எடுபடுகிறது. அப்படிக்கன்றிக்கீழ்த்துணி பளபளப்பாயிருந்து மேற் சித்திரம் கறுப்புவர்ணமாய், ஏக்கமுறப்பெற்ற தையல் எடுபடுவதில்லை, கண்ணுக்கு உற்றது உள்ளத்திற்கும் ஒக்கும். வாசனைப்பொருள்களை நசுக்கியே வாசனை வெளிப்படுப்பது போலவே, நன்னடக்கையானது வாசனையை ஒக்கும், செல்வத்தால் வெளிப்படுவது ஒருவர் குணதோஷங்களும், வறுமையால் வெளிப்படுவது அன்றாது நற்குணங்களாம்.

## VI-வது. கபடவேஷம்-வஞ்சகம்.

வஞ்சகம்செய்வது, சாமர்த்தியத்தில் தாழ்ந்த இனமாவது. சமயம் வலி அறிந்து பொய்யைவிடுத்து, மெய்யை இயற்றுவதென்றுல், ஆளிடத்தில்வுள்ள அறிவும், வலிவானநெஞ்சும் இருந்தால்தான் முடியும். அதனுல்தான் நிர்வாகம் செய்யப்பெறுவாரில், திடமில்லார்களே வஞ்சகம் செய்வர்.

லிவியாவைப்பற்றித் "தம் கணவர் சூதுவாதுகளுக்கும், தம்புதல்வர் வஞ்சகத்துக்கும் லிவியா ஈடுஜோடியாயினர்" என்றார் டாஸிடஸ். அகஸ்டஸ் சூதாய்நடந்ததும், டைபீரியஸ் வஞ்சகமாய் நடந்ததும் இதனால் ஏற்படுகிறது. வைடெல்லியஸை எதிர்த்துப் படையெடுக்கும்படி வேஸ்பாஸியனுக்கு மியூஸியானஸ் தைரியம் சொல்லுங்கால் என்னமொழிந்தார் என்றால் "அகஸ்டஸினுடைய கூரானபுத்திக்கு விரோதமாயாவது டைபீரியஸினுடைய கபடமான அடக்கத்துக்கு விரோதமாயாவது நாங்கள் நினைத்துக்கலகத்தில் இறங்கவில்லை". கபடவேஷம் என்றும், வஞ்சகம் என்றும், வாயடக்கம் என்றும், மூன்று பிரத்தியேகமான ஒழுக்கங்கள் உண்டு, அவற்றைச் சரியாய்ப்பகுத்தறிக. எச்சங்கதிகளை நேரேசொல்லத்தகும், எவற்றை அடக்கி மறைக்கவேண்டும், எச்சங்கதிகளை அரைப்பங்கு வெளியிடலாம், யாரிடத்தில் எச்சமயத்தில் வெளியிடலாம் இடக்கூடாது, என்று தாம் அறியும் சாமர்த்தியம் ஒருவர்க்கு உண்டானால், இதுதான் சீமைகளையாளும் மந்திரிக்குரியதந்திரம், வாழ்க்கையில் உதவும் தந்திரம், இப்படி டாஸிடஸ் அபிப்பிராயப்படுவது ஒப்பேயாம். அச்சாமர்த்தியத்தினர்க்கு வஞ்சகம் இடைஞ்சற் செய்யுமேதவிர, வஞ்சகம் அவர்க்கு முற்றிலும் வேண்டாதது. அவ்வளவு சாமர்த்தியம்படையாதார், வாயடக்கமாயும் வஞ்சகமாயும் எல்லா வேளைகளிலும் நடந்துகொள்ளவேண்டும். குருடர் தட்டித்தடவிக்கொண்டே நடக்கவில்லையா, அப்படிச்சமயம்பார்த்துச் சாயத் தெரியாதார் எவ்வேளையிலும் ஒருவராய் வாய் அடங்கியிருத்தலில் நன்மையுண்டு. சாமர்த்தியர் எனப் புகழ்ப்படைத்தாருடைய சங்கதியைப் பார்க்கப்போனால், நடவடிக்கையில் மறைக்காது எண்ணங்களைவெளியிட்டவர்களாகவும், நிஜம்பேசினவர்களாகவும், அவர்கள்பேச்சை நம்பக்கூடியவர்களாகவும் இருந்தனர். அவர்கள்பேச்சில் அவ்வளவு சுளுவு இருந்தும் எப்படிப் புகழ்பெற்றனர் என்றால், அவர்கள் செம்மையாய்ப் பழகிய குதிரையைப்போன்றவர்கள்; எவ்விடத்தில் நிற்கிறது, எவ்விடத்தில் திரும்புகிறது, எனமற்றெவர்க்கும் அவ்வளவு தெளிவாய்த் தெரியாது. வஞ்சகம் சொல்லாமல் முடியாதசமயம் நேரிட்டுவிட்டால், ஏற்கனவே நேரப்பேசி எல்லாரும் அறிய நம்பிக்கையுடன் வாலாயமாய் நடந்துவந்து பரவியபுகழினால் ஏதோ ஒருசமயத்தில் வஞ்சகத்துடன் நடப்பது புலப்படாமற்போம்.

2

அவரவர் தம்இயற்கையை மறைப்பது மூவழிப்படும். தமது இயற்கை இத்தன்மைத்து எனப் பிடியே கொடாமல் ஒழுகுவார்வழி முதலாவது, அவரே ஆழியர், வாயை அடக்கிப்போவர், தம்மிடத்தில் பிறர் சந்தேகப்படுகையில் அச்சந்தேகத்துக்கு ஆதாரம் இல்லை எனத்தோற்றுவிப்பார்வழி, இரண்டாவது, இவர் பிறர்சந்தேகத்தைத் தீர்க்குமட்டில் வஞ்சகம்செய்வார். இதுதான் வஞ்சகம் தம்மிடத்தில் இல்லாததன்மை தம்

மிடத்தில் இருப்பதெனக் காட்டும் போலிகடத்தை. மூன்ருவது, இதுவே கபடவேஷமாம். இம்மூன்றில்,

I. முதலாது, ஆழியர் அடக்கம். இதுசிறந்தநடை, ஊரார்வெளியிடக் குற்றம் கேட்போரிடத்தில் இச்சிறப்பு இலையாயின் உதவாது. தம் நினைப்பை வெளியிடாதார் மற்றையர் தம்மனதில் நிகழ்வதை உரைப்பப் பெறுவர், ஓயாமல் அரற்றுவாரிடத்தில் யார்தாம் தம் உள்ளத்தைத்திறப்பர், வெளியிடாதார் எனப் புகழ்பெற்ருரிடத்தில் மற்றையர்க்குத் தம் நினைப்பை விளம்பப் புத்திபோம். திறந்த வெளிக்காற்று அடைப்புக்குள்ளல்லவா மோதுகின்றது? கோயிலில் ஊரார்குற்றம் உரைப்பதைக்கேட்பது குற்றம் யாருமறிய வெளிப்படவேண்டுமென்றன்று. குற்றப்பட்டார் நெஞ்சு தவிப்பது நீங்கும்பொருட்டு. குற்றவுரைகேட்க நியமிக்கப்பட்டிருக்கும் பாதிரியர், உள்ளம்வெந்து ஆறக்கொட்டுவதைத் தாம்மாத்திரம் உணரப்பெறலாமேயொழிய, காதில்விழும் குற்றங்களைப் பரவவிடலாகாது. விரிக்காது அடக்கப்பட்டு நிகழ்வதுதான் சமயநெறிகளில் இரகசியம் எனப்படுவதும் உடலுக்கு உடையில்லையாயின், எப்படி அருவருப்போ, அப்படியே நினைப்பை மூடாமல் விட்டாலும் அருவருப்பு உண்டாம். எவரும் தம் காரியங்களையும் ஒழுங்குகளையும் வெளிப்படையாய் விடாராயின் மிக்க மதிப்புப்பெறுவர். வாய்க்கு வரும் வரையும் கொட்டும் அறிவீனர் பகுத்தறிவிலாதார், பதறிப்பேசுபவர், கேட்டதை நம்புபவர், அறிவிற்கு எட்டியதையெல்லாம் கொட்டி, எட்டாததையும் கொட்டவிரைவர். நினைப்பைக் கண்டபடி வெளிவிடாத அடக்கம் அநுகூலம் செய்யும், முறைப்படும். நினைப்பை முகத்தினுற் காட்டாமல், வேண்டின் நாவால் மட்டும் நினைப்பு வெளிப்படும்படி நடப்பது நன்ரும். நா நவிலும் மொழியால் ஒருவர் நோக்கம் குறிக்கப்படுவதைக் காட்டிலும், முகத்தாற் குறிபடுவதே ஜாஸ்தியாதல்பற்றி, முகஜாடையால் நினைப்பு வெளிப்படும்படி விடுவது கெடுதல் செய்யும்.

II. இரண்டாவது, வஞ்சகம். ஆழ்ந்து வாயடக்கப்பட்டார்க்கு வஞ்சகம் செய்யவேண்டிய வேலை அகத்தியம் நேரிடும். வாயடக்கம்பெற்ருர் கொஞ்சமாவது வஞ்சகம் செய்யாமல் முடியாது, இருபக்ஷத்திலும் சாயாமல் திராசுமுனையாய் நடுநிலைப்பட்டு ஒருவர் நிற்பதை மற்றையர் கலைக்காதிரார்; அவரைச்சூழ்ந்து, பேச்சுகளை விடுத்து, கேள்விகள் கேட்டு, மனதை வெளிப்பட இழுக்க, தம் சார்பு எப்படியேனும் வெளிப்படும். மௌனம் சாதிப்பது எக்கச்செக்கமாம், மௌனமே தம் சார்பை விளக்கலாம். குறி சொல்லுவார் வழக்கப்படி இரட்டுற மொழியலாகாதோவெனில், அது வெகுநாட் சமாளிக்காது. வஞ்சகம் கொஞ்சம் செய்யாமல் வாய் அடக்கம் நிறைவேருது; வாயடக்கத்தினர்க்கு வஞ்சகம் கைச்சரக்காம்.

III. மூன்றுவதான கபடவேஷமோ வென்றுல், அது குற்றமே, காரியக்கேடேயாம். பெருத்த அருமையான சங்கதிகளிற் கபடவேஷம் உதவலாம். மதிகெட்டோ, பயங்கொள்ளித்தனத்தாலோ, உள்ளத்திற் சீர்க் கேடுகள் இருந்து, அவற்றை மறைக்கும் பொருட்டு, மற்றச்சங்கதிகளிலும் மறைப்பை வழங்காவிடின் மறைக்குந் திறமைதவறுமேயெனப் பயந்தோ, கபடவேஷம் போடுவர்.

(வாயடக்கம், வஞ்சகம், கபடவேஷம் என முவ்வகைப்பட்ட மறைவைக் **கரவம்** எனக்கீழே தொகுத்துக்குறிப்பம்). நமது கருத்து வெளிப்பட்டால் நமக்கு விரோதிகளாயிருப்பவர் எச்சரிக்கைப்பட்டு, இடைஞ்சற் செய்யலாம். அப்படி நம் கருத்துக்கு விரோதம் உண்டாகாமற் போகப்பார்ப்பது, கர வத்தால் ஆம் முதற்சாதகமாம். நம் கருத்தை முதலிலேயே விளம்பரப்படுத் தினுல் அதை முடிக்கவே வேண்டும். தவறின் ஊரார் ஏசுவர், தவருது என்ற நிச்சயம் நமது வசமன்று. பின்னுல் ஏச்சுநேரிடா வண்ணம் முந் தியே வாயடக்கமாயிருப்பது, கரவத்தால் ஆம் இரண்டாம் சாதகமாம். மூன்றும் சாதகம் என்னவென்றுல், பிறர் உள்ளத்தை அறியவகையுண்டு. ஏனெனில் நினைத்தபடி பேசுவாரை மற்றையர் தடுக்கார், பேசுவார் பேசட் டும் என வாளாவிருப்பர், தம் உள்ளத்து நினைப்புக்களை மறைப்பர், வெளி யிடுவதும் இடாததும் தமது வசமாதலின் வெளியிடாது நினைப்புக்களைக் கரப்பர். “பொய்விடுத்து மெய்யை யறி” என ஸ்பானியர் சொல்வதுண்டு. கபடவேஷத்தாலன்றி மெய் அறிய ஒண்ணுது என இவர் நினைத்தனர் போலும்.

கரவத்தால் ஆம் சாதகம் மூன்று என்றதற்கு நிரவலாய் மூன்று பாத கங்களும் உண்டு. அதாவது கரவம் பெற்ற நடத்தையால், பயங்கொள்ளித்த தனம் ஏற்பட்டுப்போகிறது, வைத்த குறிப்பை எட்ட நேரமுயல்வதற்கு ஊனம் உண்டாகிறது; இது முதல் பாதகம். கரவத்தினர் நோக்கம் வெளிப் படாததனுல், இவர்க்குச் சகாயம் செய்யக்கூடியவர்க்கு விலகிநிற்பர் ; தம் நோக்கம் கைகூட இவர் தனிப்பட வேலைசெய்யும்படி நேரிடுகிறது, இது தான் இரண்டாவது பாதகமாம். மூன்றுவது பாதகம் தான், மிக்க விரோ தம் செய்யக்கூடியது, அதாவது, எவர்க்கும் மற்றையருடைய நம்பிக்கை யும் நற்சிந்தையும் அவசிய மாகையால், அவை கரவத்தினர்க்குக் கிடைக் காமற்போம்.

ஆகையால் மொத்தத்தில் ஒருவர் எப்படி நடந்துகொள்ளலாமென் றுல், மறைத்துப் பேசுகிறவர் அல்லர் என்று ஊரிற் பேர் பரவியிருக்கவேண் டும். கண்டதை நினைத்தபடி கொட்டிவிடாது அடக்கம் அப்பியாசமாயிருக்க வேண்டும். அரிதாய்ச் சிற்சில சமயங்களிற் சமயத்துக்கு இசைய வஞ்சகம் இருக்கலாம். கடைசியாய் வேறுவழியின்றிக் கபடவேஷம் போடாமல்

தீராத சந்தர்ப்பம் நேரிட்டால், கபடவேஷம் வழங்கலாம். இப்படிக் கலந்து போவதே தகுதியாம்.

டி. ஆர். இராமநாதையர்.

## குருட்டுப்பையன்.*

(கோம்மி.)

1. ஒளியி னருள்பெரி தென்றுரைப் பீரஃ
தொன்று முனக்குத் தெரியாதென்பீர்
களிமிகு மவ்வொளி யெப்பொரு ளென்றேநீர்
காட்டுவீ ரேழைக் குருடனுக்கே.

2. சூரியன் நற்பிர காசமென் றேமிகத்
துள்ளிக் குதிக்கிறீர் - சற்றுமில்லும்,
சூரியன் சூடுதா னல்லும் பகலவன்
சொல்லுவீ ரெப்படிச் செய்கிறுனே?

3. தூங்கும் பொழுதிர வாமன்றி யேயானுந்
துள்ளியா டும்பொழு தேபகலாந்
தூங்காம லென்றும் விழித்திடு வேனுயிற்
றேன்றுமே யென்றும் பகற்பொழுதாய்;

4. என்பெரு மூச்சுட னென்கதிக் காகநீ
ரேங்குகி றீரது வீணலவோ?
நானெரு நாளு மறிந்திலா வப்பெரு
நஷ்டத்தை நன்ருய்ப் பொறுப்பனன்றே!

5. நான்பெறக் கூடாத வெப்பொரு ளும்மென்ற
னல்ல களிப்பைக் கெடுக்கவேண்டாம்!
வான்புள்ளைப் போலவே யிப்படிப் பாடவே
வேந்தனைப் போல விருந்திடுவேன்.

## கிரேக்கர் பிணநீற்றுக் குடுவை.†

1. அமைதியுரு வுற்றெழுகு மழகினெடு கற்புநிலை
யகலாத பூங்கன்னியே!
ஆயின்முடி வில்லாத நீள்கால மௌனமிவை
யருமையுடன் வளர்குழவியே!

* Cibber's the Blind boy. † Keats's Ode to a Grecian Urn.

குமரிநட மாடுமவன் கதைசொலு புராணிக
குயிலிகழுங் குரலினெடுநீ
கொங்குநிறை கோகனக மாலையென நமதுகவி
மேலுமினி தேசொலுவையே !
அமைவுபெற நினதிடைத் தோன்றுமுரு சாரலது
மனிதரல திருவர்கதையோ ?
அணிகொளெத் தேவரிவர் ? அன்றியெம் மனிதரிவர் ?
அச்சநிறை கன்னியிவர்யார் ?
தமைமறந் தேனோடும் ? ஏனோ வெருட்டிடுவர் ?
தப்பியுயி ரோட்டமென்ன ?
தாளமொடு தம்புருக் குழலினொடு வீணையேன் ?
தனையறிவில் விவசமென்னோ ?

2. கேட்டபண் ணினிதாயி னும்மதிற் கேளாத
பண்ணினிய தாகுமலவே ?
கீதமிகு மிசைகுழலிர் பாடுங்கள், தூலமாங்
காதினுக் கல்லவெனினும்,
வாட்டமொன் றின்றிநீ பண்மிக வொலித்திடலும்
வசையிலா ஞானசெவியும்
வாய்பிளந் தமுதமென மூழ்குமதி லல்லவோ
வண்ணமினி தாயகுழலே !
வீட்டினையொ ழித்துறுந் தோப்புமர வடிநின்று
வேய்ங்குழ லிசைக்குவேளே !
வாடாது தருவினிலை யுதிராது நீயென்றும்
வாயொராய் பண்ணையொழியாய் !
தீட்டுவேன் முத்தமெற் கிடுபுதுணி காதலா
தீண்டுவது மென்றுமிலையே !
திகையாதி, வாடிடா தவளழகு, நீ நிறைவை
திருவினிட நேசமிகவே !

3. அடரிலைக ளுதிர்காத வன்றியும் வசந்தத்தை
யென்றுமக லாதசுகமே
ஆகா ! நிறைந்தகிளை யே ! யென்று மயராம
லருமையுடன் புதிதாகவே
தொடரிசை சொரிந்திடுந் தூய்மைமிகு மானந்த
சுகநிறைய மிசைவலோனே !
சொல்லருகு ளிர்ச்சியாய் சுகமனு பவித்திடத்
தோன்றலுற வென்றென்றுமே

படராசை யேயிறைதல் பார்க்குமா றென்றுமொரு
 பசுமையாம் யௌவனத்தைப்
பரிவுட னடைந்தவொரு பக்குவமி கானந்த
 பரவசக் காதலே! நீ
யிடர்மிறையு மானுடர்த மாசைகளை யெல்லோரு
 மென்றுமே விடுவை! இதனை
யெண்ணிடவெ னிதயமும் மேங்கிடுவ தேமுக
 மெரிந்திடலு நாவுலருமே!.

4. பூசனைகள் போடவே போகுமிவர் யார்கொல்? நீள்
 பட்டுமயி ரார்ந்துடையெலாம்
பூமாலை மிக்குடைய கன்றுவா னேக்கிப்
 புறம்பிட விழுத்திடுவது
வாசனைத் தளிர்கொளெப் பலிபீட மோ? மூடு
 மந்திர நிறைந்தகுருவே!
வாரிதி நெடுங்கரை வியந்திடுமெ வூரன்றி
 வரைமுடித் தருமநிலையில்
யோசனைகள் தோறுநற் காட்சியை வியந்திடுமெ
 வூரன்றி மேலுநதியி
னோரத்தி லெந்தவூர் பத்தியுட னிக்காலை
 யூரார் துறந்தனர்களே?
நாசமிகு மூரே! நி னூற்புறமு நிச்சத்த
 நாடுமல வோவின்றைமேல்!
நாடித்த னூர்நாச மானவகை யென்னென்று
 நவிலயார் மீண்டிடுவரோ?

5. அட்டிகா தேசத்தி னருமையாம் விம்பமே
 யாடவரு மரிவையருமா
யணிபெறச் செய்துபுற் பூண்டுகள் கீழே
 யருங்கிளைகள் மேல்விளங்கக்
கட்டழகு வாழ்ந்தவெண் கல்லுருவ நிலையேமுன்
 முடிவிலாக் காலநிலைபோற்
கருத்தினுக் கிசையாத வுருவே கலக்கிடுங்
 கல்லாய மௌனவடிவே!
கிட்டியதொர் மூப்பினுற் கெடுமித்த லைமுறை
 கிடைத்திடா வேறுதன்பங்
கேளாது மானுடர்க் கொல்லுழியு மேகுளிர்
 குறிஞ்சிகற் பாவே! தினம்

நட்டியலு நண்பனும் நல்லழக துண்மையே
யுண்மையே நல்லழகென
நவின்றிடுவை நீயிங் கறிந்தும் முணர்ந்திடுத
ஞடியது மீதல்லவோ?

என். எஸ். அருணுசல ஐயர்.

---

## மார்க்கண்டேய கதாமணி.

---

### காப்பு.

#### கலிவிருத்தம்.

" திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயக
னகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்."

### கடவுள் வணக்கம்.

சிவபெருமான்

#### கலிநிலைத்துறை.

ஊரி லான்குணங் குறியிலான் செயலிலா னுளைக்கும்
பேரி லானெரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரி லான்வரல் போக்கிலான் மேலிலான் றனக்கு
நேரி லானுயிர்க் கடவுளா யென்னுளே நின்றான். (க)

சுப்பிரமணியக் கடவுள்.

#### குறள் வெண்பா.

அமரர்க் கபயகர மன்றளித்தெஞ் சந்நிதிவாழ்
குமரர்க்கா ளுமென் குறை. (உ)

மார்க்கண்டேயனர்

#### சிஃறுழிசைக் கொச்சகக் கலிப்பா.

கார்க்கண்டப் பெருமானின் கருணையினின் மிருகண்டப்
பேர்க்கண்ட வன்றனக்குப் பிள்ளையா நற்றவத்திற்
பார்க்கண்ட லங்கணனிப் பத்தியுடன் பூசித்த

---

(2) சந்நிதி - புதுச்சந்நிதி யென்னு மொருபெருங் கோயில், "குமரர்க்கு ஆள் நாம்" என்க.

மார்க்கண்டன் சீர்வாழ்த்தா நாவென்ன நாவே
மன்னுதவன் சீர்வாழ்த்தா நாவென்ன நாவே. (௩)

நின்றசீர்த் தவமதனி னேயமுட னிற்பார்க்கெங்
கென்றுந்தீங் கொன்றுமிலை யென்றுணர்த்த வர்தெமது
குன்றவிலி சேவடியாற் கூற்றுதைப்பித் தெண்விதிவெல்
லின்றவன்சீர் கேளாத செவியென்ன செவியே
யெம்முனிசீர் கேளாத செவியென்ன செவியே. (௪)

## அவையடக்கம்.

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கந்தமெனும் பெருங்கடலு ளரனடியர் காதையொன்று சற்பார்க் கூக்க
மூந்திமிகப் பயிலுவிக்க முதுமொழிக ளவைசெறித்து முற்று மென்று
சுந்தரத்துப் பாசெறியுந் தோன்றலார் பணித்தவழி சொற்றேனித்தைச்
சிந்தைமகிழ்ந் தறிவினரு மனம்போல நிலைநிறுத்தல் செய்வார் மன்னே.

## கடகமாபுரச் சிறப்பு.

திருமகளாகிய பொன் குலவ, அலைகளாகிய திரைகள் மடிந்து விளங்கச் சுலாய்த் தோன்றுங் கடலை யாடையா வுடுத்து, அருவிமாலை தூங்காநிற்கும் வடவிமயப் பொருப்பையுந் தென்பொதிய வரையையும் ஆரவடமணிந்தாலும் இருபெருந் தனங்களாக்கொளீஇ, பெருநதிகளாகிய கால்களையும், நீர்நிலைகளாய ஓடைகளையுங் கொண்டொளிரும் பரதகண்டப் பூமகளின் வதன திலகம் போன்றும், தவக்கையினர்க் கணியா யவர்பிரியாது தரிக்கப் பெறுதலாற் கடகமேய்ந்தும் விளங்கா நின்ற **கடகமாபுரம்** எனப் பெயரிய நகரமொன்றுளது. அதனணி கண்டுணரல் ஆயிரம் விழிபடைத்த ஆகண்டலனுர்க்கும், இத்துணைய வென வகுத்துக் கூறல் அவ்வளவு நாப்படைத்த அனந்த வரவத்தார்க்கும் அம்மம்ம! அரிதரிது சாலவு மரிதேயென்னிற் சிறியனே னளவிற்றுமோ, அஃது ஐந்திணையும் பொலிவுபெற விளங்கும் நாடுகளாற் சூழப்பட்டுள்ளது. "மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினுந்-தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்" எனப் **புறநானூற்றினும்**, "கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்-விரிகதிர்வெள்ளி தென்புலம் படரினும்" எனச் **சிலப்பதிகாரத்துஞ்** செப்பியாங்கு கதிரவன்

---

(3) கண்டவன் = ஞானக் கண்ணையுடைய தவன். "நாவென்ன நாவே', என்றது மண் மரம் கல் இவையிற்றினுள்ள நாக்களுடன் சிற்கைநா, கலப்பைநா இவையுமுளவென்று **அடியார்க்கு நல்லாருணர்த்தாராகலின்**.

(4) உண்மைச்சரியையினை உலைவின்றித் தாழாதுஞற்றினராகலின், ஊழையு முப்பக்கங் கண்டனர் என்க. "செவியென்ன செவியே" என்றது மண் மரம் கல் இவையிற்றினுஞ் செவியிருத்தலான். கொச்சகக் கலிப்பா விரண்டும் படர்க்கைப் பரவல்.

மைந்தனுகிய காரிக்கோள் இடபம் சிங்கம் மீனமென்னு மிராசிகளுடன் மாறுபடினும், தூமகேது தோன்றினும், பரந்த கிரணங்களையுடைய வெள்ளி மீன்முன் சிற்றற்குரிய வடதிசையினில்லாமே தென்றிசைக்க ணேடினும், கருநீற்று வெண்ணீறும் திருநீற்றைப் பரவப்பூசிப் பரமநாதன் றிருமேனி சிவணநின்ற கருவி மாமழைகள் தாம் மாறுபடாமே கடலகம்புக்குத் தட நீர் முகந்து, மலைகளிற் சரிக்கு முறவானே யவ் வரையரையன் மகளுருவ மானப்போந்து படீஇ, அந்நகர வேதாகம முழக்கம்போன் முழங்கி, அன்ப ரிருதயக் குகைக்கணவும் பரஞ்சோதி நேரத்தடித்து, அஃதவர்க்களிக்கு மளிபோலத் துளித்துச் சோனைகாட்டி, தம்பருவப் பெயலாகிய பெரு வளத்தை யென்று மெங்கணும் பொழிதலை யுடைத்து.

அதனானே யாற்றுநீர் தேக்கிப் பருவநோக்கிச் செங்கெற் கதிருடன் அறுகையுங் குவளையையுங் கலந்து தொடுத்த மாலையை மேழியிலே சூட் டிப் பூமியை யிரண்டாகப் பிளப்பாரைப்போல, இரப்பவர் சுற்றத்தையும் புரப்பவர் கொற்றத்தையுந் தம்முழவானே சுரப்பிப்பான் பொன்னேர் பூட்டி நின்ற கங்கைப்புதல்வராங் காராளர் ஏழைப்பாடும் ஏர்மங்கலப் பாட்டும், அழுகுசே றறிந்து விளாவி விழுமிய முளைகளை யிந்திரத் தெய்வ தம் பராய் வித்துந ரோதையும், பறித்து நடுவார் சூழனியும், தேவதேவ பரமாத்தன் ஜீயரைக் காய்ந்து சிட்டரை யளித்தலியையப் பைங்கூழ் அடர் த்தகளைகளைக் களைதல் செய்வார் கம்பலையும், கல்வி கேள்வி ஒழுக்கிவை யேறவேற அறிவோங்கி வளர்ந்தாங்கு நீரேறவேற வானுற வளர்ந்த பைங் கூழ்கள்.

"சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம்போன்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே."—(சிந்தாமணி.)

என்றாங்கு விளைந்தனவற்றை யரிந்து குவைப்பார், இந்நென்மணியைப் பல வாற்றாற் செலுத்து மறவழியானே நறக்க மிருப்பதுவேண்டா இதனானே சேறுமென வுரைத்தறுத்தாரா யேறிக்குவித்து விண்ணறுத்து மேலேறி நோக்குங்கால், இந்திரன் முதலிய விமையவர் யாவரும் கணிகையர் பாட லாடற் களிப்பினும், அவர் முதலிய அரமகளிரது வரைத்தடக் குயத்தடத் தும் ஓயாது திளைத்திருந்தாராக, அவையிற்றைப் பார்த்திரக்கங் கொண்டு, அந்தந்தோ! இச்சிற்றின்பமாய அழிதன்மாலையவற்றிற்காகவா பரிமே தம், வாசபேயம், உத்தியம், அக்கினியாதேயம், அக்கினிட்டோமம், தரிச பூரணமாசம், சாதுர்மாசியம் அதிராத்திரம், சோடசீயாதி யாகங்களையும், ஏனைய புண்ணியங்களையு மியற்றுநின்றனர்? யாமினிப் பூதலஞ்சார்ந்து சிற ப்பு நூலாகிய சிவாகமவிதிப்படியே சிந்தையு மொழியுஞ் செல்லா நிலை

மைத்தாய வந்தமிலின்பத் தழிவில் வீடாகுஞ் சிவசாயுச்சிய முத்தியினையே விரும்பிச்சரியை யாதி சதுட்டய சாதனங்களை யநுட்டிக்க வேண்டு மென்றெண்ணினர் போன்றிறங்குவார் ஆர்ப்பும், சூட்டைப் பிரித்துத் துவைத்தற்குக் கடாவிடுகின்றார் பொலி பாடுதலாகிய முகவைப்பாட்டும், தம்முழையடுத்தாரைக் குற்றநீக்கிச் சுற்றம் வேருக்கித் தனியோகில் நிறுத்துந் தண்ணளித்தவரேய்ப்ப, நென்மணியை வைக்கோல் பதரிவை கழீஇத் தம்மில்லிடத் திறுத்துவாரோதையும், என்று மருவூர்கள் கெழுமிய நாட்டின் வளத்தது மந்நகரமேயாம்.

அன்றியுங் கடலிலே காற்றுன் வந்த நல்லிலக்கண மமைந்த நிமிர் செலவினையுடைய மன்காளன், சாரங்கன், கங்காநீலன், மௌவழகன், கொங்காளன், சன்ன சம்பான், குங்குமச்சோரன், கரியான், நீலன், சாரன், மள்ளான், உரஞ்சிவந்தான், நல்லான், கருங்காற் சம்பானுதிய பெயர்களை யுடையனவாய், சுவரிதகம், ஆக்கிரந்திகம், வல்கிதம், இரேசிதம் என்னு நடை பயின்றனவாய் விளங்கும் பரியினங்களும், கோசிகம் பீதகம் பச்சிலை அரத்தம் நூண்டுகில் சுண்ணம், வளகம் பஞ்சு கிரட்டு பாடகம் கோங்கலர் கோபம் சித்திரக்கம்மி குருதி கரியல் பேடகம் பரியட்டக்காசு வேதங்கம் புங்கர்க்காழகம் சில்லிகை தூரியம் பங்கம் தத்தியம் வண்டை தவற்றுமடி நூல் யாப்பு திருக்கு தேவாங்கு பொன்னெழுத்து குச்சரி தேவகிரி காத்தூலம் இறஞ்சி வெண்பொத்தி, பணிப்பொத்தி யென்று சொல்லப்பட்ட ஆடைத்தொகுதியும், மலைபாரம், தீமுரன் பச்சை, கிழான் பச்சை, பச்சை வெட்டை, அரிசந்தனம், வேர் சுக்கொடி யென்றறையப்பட்ட ஆரக்குவையும், அம்பரேச்சம், கத்தூரி, சவாது, சாந்து, குங்குமம், பனி நீர், புழுகு, தக்கோலம், நாகப்பூ, இலவங்கம், சாதிக்காய், வசு வாசி, கிரியாசம் தைலமென்னும் வாசவர்க்கங்களும், மேருவிற்றோன்றிய மாணிக்கமும், சாம்பூநதப் பொன்னும், செந்தமிழ்ச் செவிலியாய்ச் சகத்திற்கதித்த தவத்தின் மிகுந்த அகத்தியனுர் எழுந்தருளும் பொதியத்திற் பிறந்த சந்தனம் அகில் என்பவற்றின் தொகுதியும், யவன தேசக் கண்டு சருக்கரையும், எழில் கழீஇ விளங்கு மிலங்கை நகரத்தினிய வுணவும், ஆண்டுக் கடலிலுண்டாஞ் தெளிபொளி முத்தக் குவியலும், சுரநதிப்பொருளும், காவிரிப்பயனும், கடார தேசத்ததாநுகரும் பொருளும், இவை யொழியப் பெரியவு மரியவுமாகிய பலவகைப் பொருள்களும் நிலமங்கைப் புறநெளிய வந்துவந் தீண்டி யினிதாகத் தங்குகையினுலே வளத்தின் றலைதெரியா வகனிட ஆவணங்களையும், விண்ணவருலகமும் அடிவீழ்ந்து வணங்க வுயர்ந்தமாட மாளிகைகளும், மணவிழவரு மறுகர்களையுங் கொண்ட பெரும்புகழது மதுவேயாம்.

ஆண்டுள்ளாரோ கல்வி கேள்விகளாற் சிறந்து அமரர்ப்பேணியும், ஆவுதிகளை யருத்தியும், நல்ல பசுக்களோடு எருதுகளைப் பரிகரித்தும், அந்தணர்

க்குளவாம் புகழ்களை நிலைபெறுத்தியும், புண்ணியங்களைச் செய்தும் அவையிற்றைச் செய்யமாட்டார்க்குத்தாந் தானமுதவியும் பசும்பத மீந்தும் இங்ஙனம் அறத்தொழின் முட்டுப்படாக் குளிர்ந்த அருளுடனே வாழுந்தகைய தலையாயாரென்க.

## மிருககண்டுயேர் தவவிசேடம்.

இன்னன சிறப்புக்கள் வாய்ந்த எந்திர துவசங்க ளியைந்து, கதிர் மதி செலவைத் தடுத்துயர்ந்த மதிலாற் சூழப்பட்ட நகரத்திலே, நைமிசாரணியமும் நிகரின்றி விளங்குந் தவாரணியத்திலே, ஒருமையுறூஉம் இருபிறப்பாளர் கோமானாய், முக்கணாற் பெருந்தோளுடை யைம்முகக்கடவுளாம் அறுமீன்காதலனை யீன்ற எழுவகைப் புவனத்து மெண்வகை யுருக்கொடுவிளங்கி, ஒன்பானுருக்கொடு நடிக்கும் பத்துத் திருக்கரங்களையுடைய அதிபரமாத்த பதியாகிய பரமசிவனது திருவடிகளையே பற்றுக்கோடாக்கொண்டவராய், தங்கண் ஒன்றிலேயே ஆலத்தையு மமிர்தத்தையும் பொழிந்து வைத்திருக்கும் மங்கையர்மயக்கான் மாழ்காதவராய், பஞ்சாக்கினி மத்தியினின்று பஞ்சேந்திரியங்களையு மவித்து, பஞ்சாக்கரத்தையுன்னிச் செய்யுந் தவத்திற் றமக் கொப்புயர் வில்லாதவராய், சத்துவ குணக்குன்றமாய், சந்தேக விபரீத மயக்கஞான மில்லாராய், விபூதி ருத்திராக்க தாரணராய், வேதாகம உபநிடத சித்தாந்த புராணேதிகாசாதி வித்தியாபாராவாரமாய், தத்துவஞானந் தலைஇயராய், ஆதிசைவசாரிய பீடமாய் விளங்காநின்ற **குச்சக முனிவர்** என்பார் ஒருவர் இருந்தனர். அவர், விண்ணிலத் தருகிக்காணும் மேதகு வடமீனன்றி யிம்மண்ணிடத்து நேர்சொல மடந்தையர் யாரு மில்லாத பண்ணையும் வென்ற தீஞ்சொற் பாவைத் திருவனாளை மணந்து, அவளுடன் காகத் திருவிழிக்கு மொரேமணி கலந்தாங்கு இருவராகத்து மோருயிர்பெற்றாற்போலு முழுவ லன்புடையராய் வாழுங்கால், அம்மாதுசிரோமணி தங் குடித்தவப்பயனெலாந் திரண்டொரு வடிவெடுத்தாற் போன்ற ஓர்குமரனை வயிறு வாய்த்தீன்றாள். அவற்குக் **கௌச்சிகன்** என்று பெயரிட்டனர். அக்கௌச்சிக விருடியனார் "மகனறிவு தந்தையறிவு" என்பதற் கிணங்கித் தந்தைபோன்ற நற்குண நற்செய்கையுடையராய், வேதசிவாகம மெய்க்கலைகளில் விற்பன்னராய், "மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை-யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்" எனத் தெய்வப் புலமைத் **திருவள்ளுவநாயனார்** திருவாய் மலர்ந்தருளியதற் கிலக்கியராய் ஒழுகு நாளிலே பதிபசுபாசங்களி னிலக்கணங்களை யுணர்ந்தா ராதலின் நித்திய வநித்திய வஸ்து விவேகந் தோன்ற இகமுத்திரார்த்த பலபோக விராகம் பிறந்து முமூட்சுத்துவ முற்றாராய்த் தம்மனத் தின்னண மெண்ணுவ ராயினர்.

ஆன்மாக்களுக்குப் பிறவிவருவது இருவினையின் காரணத்தினாலன்றோ? அப்பிறவி யென்பது இருக்கும்வரையும் துன்பமென்பன அகலாவாம். அத

ணக் கடக்கலாமோ வெனில் எளிதன்று. தோன்றல் ஒடுங்கல் என்னுஞ்சுரப்பு வறப்புக்களை யுடையனவாய், மதியை விழுங்குங்காமம் என்னும் பெரும்பாம்பு நீங்கா துறைவனவாய், விடயங்களாகிய இரைகளை நுகருங் கரணங்கள் என்னும் மீன்கூட்டங்கள் சுழல்வனவாய், பெருமிதம் என்னும் பரப்பையுடையனவாய், நோய்கள் என்னும் ஒழிபாத புலால்மணம் வீசுவனவாய், மாறிமாறித் தோன்றி மடங்குஞ் சுகதுக்கங்கள் என்னும் அலைகள் மோதுவனவாய், மனம் ஆகிய வஞ்சராச மகரமுழல்வனவாய், அடங்குத லில்லாத அகங்கார மமகாரங்களாகிய ஆமைக் கணங்கள் திரிவனவாய், அவா வென்னு மளவு கடந்த ஆழத்தை யுடையனவாய், களவாகிய பாரும் மலையு முள்ளனவாய், கலகமென்னும் விடங்கள் தங்கிய புழுக்கள் நெளிவனவாய், குற்றங்களென்னும் நுரைக தோன்றுவனவாய், சிந்தையு மொழியுஞ் செல்லாநிலைமைத்தாய அத்துவித முத்திக்கரையைச் சேராமே விலக்கித் தமக்குளகப்படுத்தும் அரிவைய ரென்னுங் கொடுஞ்சுழிகளை யுடையனவாய், கோபமாகிய வடவாமுகாக்கினி கொதித்தமர்வனவாய், யாவருங் கண்டஞ்சத்தக்க போகம் என்னும் முதலைகள் பொருந்துவனவாய், மூலமலம் என்னும் உவர்ப்புக் கலந்தனவாய், யோனிபேதங்களாகிய எண்பத்துநான்கிலக்கந் துறைகளையுடையனவாய், விளங்குந் தேவர் மனிதர் விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்னும் எழுவகைப் பிறவிப் பெருந்துன்ப சாகரங்களா யிருக்கின்றன. இவைகளையெல்லாஞ் சர்வதத்துவ பிரேரகராய சிவபெருமானது திருவடியாகிய தெப்பத்தைக் கொண்டு கடத்தலன்றி, மற்றையவைகளாற் றுண்டி முத்திக்கரைசேரன் முடியாதுமுடியாது. என்றிவ்வாறு ஒருமையுடனுணர்ந்து, அத்திருவடியாகிய தெப்பந் தவமென்னு மரும்பொருளீட்டத்தானே வாய்க்கும்.

"தவந்தனின் மிக்கதொன் றில்லை தாவில்சீர்த்
தவந்தனை நேர்வது தானு மில்லையாற்
றவந்தனி னரியதொன் றில்லை சாற்றிடிற்
றவந்தனக் கொப்பது தவம தாகுமே''—(கந்தபுராணம்.)

என்று கடைப்பிடித்துத் தந்தையிடம் விடைபெற்றுத் தவங்கிடப்பான் கானகம் பெயர்ந்தனர். போந்தார் ஓர் தண்புனற் பொய்கை மருங்கிற்சார்ந்து, ஆசனவகையு ளொன்றினமர்ந்து, பிராணவாயுவை இரேசக பூரக கும்பகஞ் செய்து, பிரத்தியாகார தாரணைகளை முடித்து, ஆக்கினைத்தானத்திற்குமேல் ஆயிரவிதழ்க் கமலக்கண் அரன் அம்பிகை கந்தக்கடவு ளாயமூவரும் விளங்கநின்ற சோமாஸ்கந்தமூர்த்தத்தைத் தியானித்துப் பற்பலவருடம் அருந்தவ மிழைப்பாராயினர்.

இங்ஙனம் அங்கட் பதுமைபோ லசையாமே மௌன முற்றும் உணவுறக்க நீத்தும், ஐம்புலன்களையு மொருவழிப்படுத்தியுங் குற்றமற நோர்க்கும்

வேளையிற் பசுக்கள், எருது, எருமை, கடமை, மான், மரை முதலிய மிருகங்கள் ஆண்டண்மித் தத்தம் காயங்களினுற்ற கண்டூயங்களை நீப்பானினைந்து அன்னவர் வடிவத் துரோஞ்சிச் செல்லுமென்ப - தெளிந்திசினோர். அங்ஙன முறைத்தவழியும் யாவது மறியாராய் நோற்று நிற்க, முனிவர் யாருமிவர்க்கு நிகரலரென்று உம்பரு மிம்பரு முவாகொண்டாட, அதனை யறிந்த காவற்கடவுளாகிய பதும நாப மூர்த்தியும், இஃது முன்னைநாளிற் றிரிபுர மெரிசெய்தழித்த விரிசடைக் கடவுளின் திருவருளென்ன மீப்புகழ்ந்து, அவர் தவவிசேட மறிப்பா னுவணரூடராய்த் தேவகணம் போற்றச் சேணிடைச் சேருபு நின்று திருநோக்கஞ் செய்தருளினர். செய்தார் நிகழ்ந்தன கண்டு அற்புத மெய்தி, இருடி குமாரரின் அருந்தவத்தைச் சீராட்டியவர் முற்சென்று, எற்படு முடம்பைத் தமதெழில் வாய்ந்த மலர்க்கரங்கொடு தைவந்து, 'மாசறு மைந்த! மிருகங்கள் வந்து தம்மெய்க் கண்டூயந் தீர்ப்பான் வன்மையோ டுரைக்குந் தோறும் துளங்கலாகா நிலையையுந் தோற்றத்தையும், அளக்கலாகா வளவினையும் பொருளையும் நீ கொண்டிருந்தமையாற் றவக்குன்ற மென்பதற் கிலக்கு நீயே. ஆகலின் மன்றச் சிறந்தனை, நின்ற புகழினை. நிற்கு இற்றை முதன் **மிருக கண்டூயன்** என்னுஞ் சிறப்புப் பெயர் வழங்கப்படுக' வென்று திருவாய் மலர்ந் தருளிய மாத்திரையே முனி குமரனார் உளந்துடிக்க, உடனடுங்க, விழி நீர் சொரிய, உரோமஞ் சிலிர்ப்ப, உரை தடுமாற, கரங்கூம்ப வெழீஇ, ஆனந்தக் கூத்தாடி வணங்கி அன்புடன் றுதிப்பாராயினர்:

சீத ராவுமை சோத ராவெம தீத ராவர நாமதா
மோத ராவன மாலை சூடு முகுந்த ராச சகுந்தமூர்
நாத ராவண னைக்க டிந்திடு நார ணாதழ ணாருகட்
காத ராவணை மீது கண்டுயில் கண்ண னேகடல் வண்ணனே.

அச்சு தாமுக மச்சு தாகர னன்ன கோதை யசோதைதன்
கச்சு லாமுலை யுண்டு பண்டவள் கைய ணைத்துயில் கொண்டிடு
மெய்ச்சு தாபசு மைச்சு வாசக மென்மொ ழித்திரு நாயகா
நச்சு வாயர வுச்சி மீது நடித்தி டும்பத நளினனே.

சாலி நேர்தரு தாரை யைக்கதிர் தந்த சேய்பெற முந்தைநாள்
வாலி மார்பக மூடு நீடிய வாளி யேவிய மீளியே
யாலி யாவரு மலகை தன்முலை யமுதொ டாவி யருந்திமுன்
காலி னாலுருள் சகடு தைத்தருள் கடவு ளேகரு ணாகரா.

கேச வாவயி ரோச னற்கெதிர் கிட்டி மூவடி மண்கொளும்
யாச காநர சிங்க மாய்முத லிரணி யற்றெறு முரணிலாய்
வாச வாரிச லோச னாமயில் வாசி யூர்குகன் மாதுலா
தேசி னாலுயர் தேவ கிக்கொரு செம்ம லாய்வரு செம்மலே.

என்றின்னனவாய துதிகள் பலப்பல மொழிந்து விழுந்து வணங்கி யெழுந்தனர். அப்போழ்தத்து ஒருபெருங் கொற்றப்பரிதி முதலா நின்ற வைம்படைக்கைப் பதுமநாபன், அங்கவனை நோக்கிச் சிவஞானப் பெருஞ் செல்வத் தவமுனிவ! ஒருகலைப் பிறைக் குழவியைப் பகையரவுட னுலவி வளரப் பணித்தருளி, ஒரு மானை வலத்தும் ஒருமானை யிடத்து வைத்து, உலகு போற்று மறுமுகத்தானை யளித்தான்றன் பூரண திருவருணின்பாற் பொலிக. கழி பிறப்புக்க டோறுங் கெழுமிய பாவங்க ளொழியக்கடவன வென மாற்றம் வழங்கிப் புலவர் குழாத்துடன் பொம்மெனக் கரந்தனர்.

பின்னர் முனிவரனார் முப்புர மெரித்த முக்கட் டேவதேவன் தடங்கருணையால் அகமிக மகிழ்ந்தூங்க, வல்விரைந்து பன்னசாலை நோக்கிச்சேறுநிற்ப, ஆண்டுள குச்சக விருடியார் நோற்பான் போந்த கான்முளை பன்னாள் கழிந்தும் இந்நாளும் வந்திலனே. என்று, "கடந்த ஞானியர் தாங்களு மறப்பரோ மக்கண்மேற் காதல்" என்றபடி புத்திர சோக முற்றாராய், பூங்கதிர் வரவு பார்க்கும் பொற்ற புண்டரீகம் போலவும், சந்திரோதய நேடுந் தடவரக் காம்பல் சிவணவும், ஓங்கிய கார்மஞ்சு தேடும் ஓர் மஞ்ஞைமானவும், நீர் வருகை நோக்கும் அறனசையாள னன்னவும், ஆறுறுக் கப்புறத்தே யிருத்த வல்ல ஞானசாரியன் வருகையாயும் அதிதீவிரபக்குவி நேரவும், பொருள் வயிற் பிரிந்த காதலன் வரவு பார்க்கும் பத்தினிப் பெண்டிர் புரையவும், வானேக்கும் பயிர் கடுப்பவும், கோனேக்குங் குடியேய்ப்பவும் இவரது வருகையை யெதிர்பார்த்திருப்ப, அந்த வளர்மறை யாகம வுணர்வு வண்மை படைத்த வுறவரும் அவட்சென்று தாதை பாதத்தில் அடியற்ற மரம்போல் வீழ்ந்து வணங்க, அவரும் அருந்துண விழந்தோ னண்டரமுதத்தை யெதிர் கண்டாற் போலவும், வருந்து மிடியன் சேமவைப்பினைப் பெற்றாலொட்டவும், கரையிலாக் களிகொளீஇக் கலைத்தோற் றவிசினின்றெழீஇக் கரையுடைத்தெழு நீத்தம் போற் பேரன்பு பொங்கப் புதல்வனை யெடுத்து உச்சி மோந்து மடிக்கணிருத்திப் புறந்தடவி மகிழ்வுட னுரைப்பாராயினர்.

(இன்னும் வரும்)

நா. கதிரைவேற் பிள்ளை.

# ஆசார விளக்கம்.

## சூத்திரம். 2.

### இனி நன்னூல் சூத்திரம்.

" அறிவரு ளாசை யச்ச மான
நிறைபொறை யோர்ப்புக் கடைப்பிடி மையல்
நினைவு வெறுப்புவப் பிரக்கநாண் வெகுளி
துணிவழுக் காறன் பெளிமை யெய்த்தல்
துன்ப மின்ப மிளமை மூப்பிகல்
வென்றி பொச்சாப் பூக்க மறமதம்
மறவி யினைய வுடல்கொ ளுயிர்க்குணம்."

எனக்கூறுதலானு மக்குணங்கள் மக்கள் விலங்கு புள்ளாதியுயிர்களுக்கு ஒரு சில வேறக்குறைய வுண்டென்பது தெற்றென விளங்கும்நூலோர்வு (அறிவுவளர்ச்சி) ஊகம் மறுமை பேணல் (தெய்வங்கொளல்) மூன்றுமே மனிதர்க்குண்டாம்விசேட ஞானங்களாம். இதனையே பகுத்தறிவு விவேகம் என்பர்.

சிலர் உலக ஞானமாத்திர முடைமையால் திரியக்காதி ஜெந்துக்களுக்குக் குறுக்குடலும், கீழ்நோக்கியமுகமும். இகபரசுக மிரண்டு நோக்குந் தகையுடைமையால் மானுடர்க்கு மேனோக்குடலும், கீழ் மேன்மையமாக (குறுக்கு) முகமும் அமைக்கப்பட்டுள்ளன வென்பார்.

ஆசாரத்தாற் பெறுஞ்சுகம், இம்மைச்சுகம், மறுமைச்சுகம் எனவிருபாற்று. அவற்றுளிம்மைச் சுகம் மக்கள் விலங்காதிகளுக்குப் பொது. மறுமைச்சுக மானுடர்க்கு விசேடம். அஃது விவேகத்தாற் பெறத்தக்கது. அவ்விவேக (பகுத்தறிவு) விசேடம் பற்றி நரர்க்கு மனிதர் என்று பெயராயிற்று. (மனிதன் என்றபதம் மந்* என்னும் தாதுவினடியாகப் பிறந்த பெயர்.) விலங்கு பக்ஷியாதியொப்ப மறுமைச்சுகம் வேண்டாருள்ளும் இம்மைச்சுகம் வேண்டாரிலர். மறுமைச்சுகம் வேண்டுநரும் சரீரசுகமின்றி அஃது சாதித்துப்பெற முடியாத தொன்றாதலால் அவர்க்கும் (சரீராதிசுகம்) அவசியமே.

### திருமந்திரத்தில்.

" உடம்பா ரழியி லுயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தே
உடம்பை யானிருந் தோம்புகின் றேனே"

---

* மந்=அறி=to know + நித=மனித = அறிந்த=known.

என்று கைலையங்கிரியில் எழுபதுகோடி யுகம் யோகுவீற்றிருந்த திருமூல நாயனுரே மறுமைச்சுகங்களைத் தரத்தக்க ஞானம் உடம்பின்றி யெய்தாது, அவ்வுடம்பு கூடியிருக்கினும் அஃது நன்னிலையிலிருந்தாலன்றி அஃதேலா வாகலின் உடலை நன்னிலையில் வைத்துக் காக்கவேண்டுமென்று குறித்தலும் இதை வற்புறுத்தும். இக்கருத்தையே ஔவையார் குறளில் "தருமம் பொருள்காமம் வீடெனு நான்கு, முருவத்தா லாய பயன்" என விளக்கினர்.

விலங்காதி யுயிர்களுக்கு நூலுணரறிவின்மையின் அஃதுடைய மனிதரில் ஜாதி தேச மதப் பகுப்பின்றி இம்மைச்சுகம் வேண்டுநர் இம்மை மறுமைச்சுகங்கள் வேண்டுநர் என்ற விருதிறத்தின ரனைவருக்கும் அன்னவர்க்கு நன்மையடைவழி போதித்தற் பொருட்டே இந்நூலென்பான் "நலத்திலார்வத்தவர்க்கே" என்னப்பட்டது.

தன் சுகத்துக்கேற்ற நல்லாகாரந் தேடல், குளிர் காற்றுதியிடையூறு நீக்கும் சுத்தமான நல்லில்ல மியற்றிக் கோடல், தன்னினம் பேணியூட்டல் குளித்தல், முதலிய வாசாரங்களை எறும்பாதி யுயிர்களிட மானுடருங்கற் றுக்கொள்ளலாமென ஆன்றோரு முணர்த்திருக்கின்றனர்.—அஃது

"நந்தெறும்பு தூங்கணம்புட் காக்கை யென்றிவைபோற்
றங்கரும நல்ல கடைப்பிடித்துத்—தங்கரும
மப்பெற்றி யாக முயல்பவர்க் காசார
மெப்பெற்றி யானும் படும்."—ஆசாரக்கோவை 96.

முதலிய வாக்கியங்களால் விளங்கும்.

இனி ஜடபதார்த்தங்களில் அயங் காந்தங்கண்டு சாரல், ஓரினவணுக்கள் தம்மினஞ்சாரல், வட்டம் இருகோணம் முக்கோணம் சதுரம் முதலிய தம்வடிவுகாத்தல் முன்னுன இனத்தோடுசாரல் இனத்தொடுசார்ந்து தம்மைப்பருக்கச் செய்தல், முதலிய தொழிற் பண்பு பண்புகள் விளங்கக்காண்டவின் அவையிற்றிற்கு மறிவுகோடலி னிழுக்கென்னெனில் அவையாவும் அப்பொருட்களின் குணபேதங்களன்றி உயிரொடுகூடி யுணருமுணர்ச்சியன்றெனவிடுக்க. இஃது நன்னூல் "வானவர் மக்க ணரசர் விலங்குபுள் ஆதிசெவி யறிவோ டையறி வுயிரே" "பல்வகைவடிவிரு நாற்றமைவண்ணம், அறுசுவையூறெட்டியிரல் பொருட்குணம்" "தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல், நீங்க லடைத னடுங்க லிசைத்தல், ஈதலின்னள விரு பொருட் டொழிற்குணம்" முதலியவற்றுலோர்க.

சுகத்தில் விருப்புள்ளவன் ஆசாரத்தை விரும்ப வேண்டும் என்பதற்குப் பிரமாணம் மநுதர்ம சாத்திரம், அத். 108-சுலோகம்,

𑌆𑌚𑌾𑌰𑌃𑌪𑌰𑌮𑍋𑌧𑌰𑍍𑌮𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌃𑌸𑍍𑌮𑌾𑌰𑍍𑌤𑌏𑌵𑌚 ।

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌸𑌦𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂𑌸𑍍𑌯𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑌵𑌾𑌨𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 ॥

(இ-ள்) வேதத்திலும் ஸ்மிருதியிலும்சொல்லப்பட்ட ஆசாரமேஎல்லோருக்கும் முக்கிய தருமமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் தான் சுகப்பட இச்சையுள்ளவன் இந்தச் சாத்திரத்தில் முயற்சியுள்ளவனுயிருக்க வேண்டியது.

### திருவள்ளுவர் குறள்.

"பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை."

**பராசரஸ்மிருதி ஆசாரகாண்டம் 37-ஆம் சுலோகம்.**

𑌚𑌤𑍁𑌰𑍍𑌣𑌾𑌮𑌪𑌿𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌮𑌾𑌚𑌾𑌰𑍋𑌧𑌰𑍍𑌮𑌪𑌾𑌲𑌕𑌃 ।

𑌆𑌚𑌾𑌰𑌭𑍍𑌰𑌷𑍍𑌟𑌦𑍇𑌹𑌾𑌨𑌾𑌂𑌭𑌵𑍇𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌃𑌪𑌰𑌾𑌙𑍍𑌮𑍁𑌖𑌃 ॥

ஆசார நிருபணம் - (இ-ள்) நான்கு வருணத்திற்கும் தருமத்தைக் காக்கத்தக்கது ஆசாரம், அதைத்தவறின தேக முடையவர்களுக்குத் தருமம் முகங்காட்டா தொழியும் (எ-று)

**ஆசாரத்தினுற் சகலரும் ஆயுள் செல்வம் இகலோகசுகம் பரலோக** சுகம் இவைகளைப்பெறுவார்கள். ஆசாரந்தவறினவர் இவைகளைப்பெறுவதில்லை, ஸத்புருஷருக்கு ஆசாரம் லக்ஷணமாமென்று பாரதம் ஆநுசாஸநிகபருவங்கூறுகின்றது. ஆரணிய பருவத்திற் கோபம் பொருமை அகங்காரம் பிடிவாதம் இவைகளற்று நடுவுநிலைமை சாந்தி முதலிய குணங்களை யுடையவர்களே இஷ்டர். அவர்களது அநுஷ்டானமே ஆசாரமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாக மநுபோதாயனர் முதலானோர் கூறினர்கள். இதனுல் நான்கு வருணத்தார்க்கும் பொதுத்தருமத்தைச் சிறிதுகூறவேண்டுமென்று கேள்விசெய்த வியாசருக்குத் தருமத்திற்குக்காரணமாகிய நல்**லொழுக்கத்தைப் பொதுதருமமென்று** பராசரர் உத்தரம்அருளிச்செய்தார்." இவைபோன்றன பலவுள. விரிவஞ்சி விடுத்தாம்.

இனிச்சூத்திரத்து ஆகமம் என்றுகூறி உரையில் வேதம் எனச்சுட்டியதெஃதாமெனில் ஆகமம் என்றபதம் வேதத்துக்குப்பரியாயநாமமாதலாலும், 𑌵𑌿𑌦𑌜𑍍𑌞𑌾𑌨𑍇(வித்=ஞானம்) வித் என்னும் தாதுவினடியாகப்பிறந்த வேதம் என்றசப்தம் தர்மாதர்மங்களை யறிவிக்கும்நூலுக்கு (அறிதற்கருவிக்கு)ப் பெயர், ஆகமம்-ஞானம் (அறிவு) சகலஞானங்களையு மறிதற்கருவிக்கு [அல்லது வருவித்தற்கருவிக்கு] ப்பெயர். இவ்விரண்டு சப்தங்களு மொரு பொருட் கிளவிகளாதலானும், அங்ஙனங்கூறப்பட்டது. (பெயரானும்பொருளானு மொற்றுமையுறினும் இருவேறு பகுதிகளையல்லது நூல்சளையுணர்

த்தவேண்டுதலின் இரட்டுறமொழிதலென்னு முத்தியாற் கூறப்பட்டதென் பாருமுளர்.)

உண்மைப்பொருள்களைக் கேட்டற் கருவியாதலாற் சுருதி யென்றும், நியதமாக வுணர்தற்குக் கருவியாதலால் நிகமம் என்று, ஆதிகுருவினின் றும் தொடங்கிப் பாரம்பரியமாய்ப் பயிலப்படலால் ஆம்நாயமெ ன்றும், சுயம்புவாகிய பதியினின்றுந் தோன்றினமையாற் சுயம்புவெ றும், பேர் பெற்றவேதம் பொது சிறப்பென விருபாற்று. சதாசிவப் பிரமத் தினது தற்புருடாதி நான்குமுகங்களிற் றோன்றிய இருக்காதி நான்கும் பொது, ஊர்த்துவமுகத்திற் றோன்றியகாமிகாதி இருபானெட்டும் சிறப்பு எனப்படும். சுருக்கிக் கூறலாம் வேதம் சூத்திரம்; விரித்துக் கூறலாம் ஆகமம் பாடியம் என்பாருமுளர். உதாரணமாக "லிங்கார்ச்சனை யுயர்ந்த பலன்றரும்" எனவேதம் (சூத்திரம்) கூறும், ஆகமம் (பாடியம்) லிங்க வேதங்களித்தனை, இஃதிஃதிப் பலன்றரும், அநுட்டிக்க வேண்டிய பக்குவர் இத்தகையார் என்றுகூறி, அது புரிபவனியற்ற வேண்டிய செளசம் (சுத்தி) ஸ்நாநம் ஸ்களிகரணம் கரந்யாசியம் அங்கந்யாசம் பிராணாயாமம் சந்திமார்ஜ்ஜநம் தர்ப்பணாதிகளும் பூஜையிற் செய்ய வேண்டிய அந்தர்யாகம் தானசுத்தி திரவியசுத்தி ஆசனம் பாத்தியம் ஆசம னம் அர்க்கியம் அபிஷேகம் தூபம் தீபம் நைவேத்யம் அருச்சனை தோத்தி ரமாதி யுபசாரங்களும், ஆலயாதி நிர்மாணக்கிரமங்களும், பிரதிஷ்டாதி கிரமங்களும் நன்றாய் ஒழுங்காய் விளங்கவிரித்துக் கூறும். ஆகமாதார மன் றியே புராணங்களும் மிருதிகளும் விளங்குகின்றன. இன்றேல் (ஈசுர வாக்யாதார மின்றி) அவை பிரமாணமாகா தொழியுமென்றுணர்க. வேதம் சூத்திர மாதலால் அதிற் பலபரிபாகிகளுக் கவசியமான பூர்வபக்ஷ சித்தாந் தங்கள் ஞானநுபவ முடையாரன்றி ஏனையர் அறியக் கூடாதபடி கல ந்து கிடக்கின்றன. ஆகமம் ஆக்கியோனாற் செய்யப்பட்ட பாடியமாத லாற் பூர்வபக்ஷமிஃது சித்தாந்த மிஃது என ஐயந்திரிபற வெத்தகைப் பரிபாகிகளு மெளிதிலுணருமாறு விளக்கப்பட்டிருக்கின்றது. ஈசுரவாக் கியங்களில் மூலாகமங்களைப் போல ஒவ்வொரு விஷயத்தையும் பற்றித் தெளிவாயும் ஒழுங்காயும் பூரணமாயும் விரித்துரைக்கநுஞ் சாத்திரம் வேறி ன்று. முற்றுணர்ந்த ஆக்கியோனன்றி யேனையர் உண்மைகண்டு கூறல் அசாத்யமாகலிற் சதாசிவப்பிரமத்தாற் கூறப்பட்ட காமிகாதி யாகமங்கள் சித்தாந்த மென்னப்பட்டன. அவைகள் பாசுபதம் காளாமுகமாதி மதங் கூறியவாகம பாகங்களைப் பூர்வபக்ஷ வாதங்களெனக் கண்டிப்பதாலு முண்மை தெற்றென விளங்கும். ஆதலால் முற்றுணர்வற்ற கிஞ்சிக்ஞர் தத்தமக்கொத்தவாறு பாடியங்கூறல் ஒன்றுக்கொன்றெவ்வாப் பூர்வபக்ஷங் களு முள்ளிட்டனவாம். ஆக்கியோன் பாடியக்கருத்தை யொட்டிய பாடி யமே சித்தாந்தமாம். இவை முன்னுனயாவு முற்றுமோர்ந்தே நீலகண்ட

பாடியக்காரரும் "வேதாகமங்களுக்குப் பேதங்காணேன்" என்றனர். (வேதாகமாதி) சகல சாஸ்திரங்களையும் மகாதேவனாகிய மகேசுவரன் செய்தா னென்பது பாரதம் சாந்திபருவம்.

"𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌸𑍍 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌚𑌕𑌾𑌰 𑌦𑍇𑌵𑍋 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃"

முதலிய வாக்கியங்களால் விளங்கும்.

ஆகமாதி ஐந்திறப்படு நூல்கள் வருமாறு : வேதம்—இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம். வேதாந்தங்களாகிய உபநிடதங்கள் : 108. திராவிட வேதம்: 2. தேவாரம் திருவாசகம்.

## ஆகமம். 28.

1. காமிகம்
2. யோகஜம்
3. சிந்தியம்
4. காரணம்
5. அஜிதம்
6. தீப்தம்
7. சூக்குமம்
8. சகச்சிரம்
9. அஞ்சுமான்
10. சுப்பிரபேதம்
11. விசயம்
12. நிச்சுவாசம்
13. சுவாயம்புவம்
14. ஆக்கினேயம்
15. வீரம்
16. ரௌரவம்
17. மகுடம்
18. விமலம்
19. சந்திரஞானம்
20. முகவிம்பம்
21. புரோற்கீதம்
22. லளிதம்.
23. சித்தம்
24. சந்தானம்
25. சர்வோக்தம்
26. பாரமேசுரம்
27. கிரணம்
28. வாதுளம்

## உபாகமங்கள்: 224.

## புராணங்கள்: 18.

### சைவ புராணம். 10.

1. சைவம்
2. பவிடியம்
3. மார்க்கண்டேயம்
4. இலிங்கம்
5. காந்தம்
6. வராகம்
7. வாமனம்
8. மச்சம்
9. கூர்மம்
10. பிரமாண்டம்

### வைணவ புராணம். 4.

11. காருடம்
12. நாரதீயம்
13. வைணவம்
14. பாகவதம்

### பிரம புராணம் 2.

15. பிரமம்
16. பதுமம்

சூரியபுராணம். 1.

17. பிரமகைவர்த்தம்

அக்கினி புராணம். 1.

18. ஆக்நேயம்

இதிகாசங்கள்.

1. பாரதம்
2. சிவரகசியம்
3. இராமாயணம்.

மிருதிகள் 18.

1. மனுமிருதி
2. பிரகத்பதிமிருதி
3. தக்கமிருதி
4. யமமிருதி
5. கௌதமமிருதி
6. ஆங்கிரமிருதி
7. யாஞ்ஞுவல்கியமிருதி
8. பிரசேதமிருதி
9. சாதாதபமிருதி
10. பராசரமிருதி
11. சம்வர்த்தமிருதி
12. உதனமிருதி
13. சங்கமிருதி
14. லிகிதமிருதி
15. அத்திரிமிருதி
16. விஷ்ணுமிருதி
17. ஆபத்தம்பமிருதி
18. ஆரீதமிருதி

ஆயுள்வேதம். 1.

ஆயுள்வேத வழிநூல்கள்.

ஸ்ரீகண்டர் ஜீவரக்ஷாமிர்தம் 12000
சரகம்
வீமபாகம்
நளபாகம்
அகஸ்தியர்
கொங்கணர்
இராமதேவர்
கருவூரார்
கோரக்கர்
பாம்பாட்டிச்சித்தர்
கஜசாஸ்திரம்
அசுவசாஸ்திரம்
கோசாஸ்திரம்
திருமூலர் திருமந்திரம்
மச்சமுனி
தந்வந்திரிபகவான்
போகர்
சட்டைமுனி
திருமூலர்
நந்தீசுரர்
தேரையர்
பதார்த்தகுண சிந்தாமணி
தைலவருக்கச் சுருக்கம்
அகப்பேய்ச்சித்தர்
யூகமுனி
பிரமமுனி
புலிப்பாணி முனிவர்
திருவள்ளுவர்
கௌயாலிசித்தர்
மாந்திரீக நூல்கள்

முதலிய சித்தர்களின் வைத்திய மாந்திரீக நூல்கள்.

உபாகமம் சிவதருமோத்தரம்.

சிவாகமம் பத்துக்கும் வழிநூலாகும் பத்ததிகள். 18.

1. தூர்வாச சிவர்பத்ததி
2. பைங்கள சிவர்பத்ததி
3. உக்ரஜ்யோதிபத்ததி
4. ஸ்ரீகண்டர்பத்ததி

5. விஷ்ணுக்கண்டர்பத்ததி
6. சுயோதர்பத்ததி
7. வித்யாகண்டர்பத்ததி
8. இராமகண்டர்பத்ததி
9. ஞானசிவர்பத்ததி
10. ஞானசங்கரர்பத்ததி
11. சோமசம்புபத்ததி
12. ப்ரம்மசம்புபத்ததி
13. திரிலோசனசிவர் பத்ததி
14. அகோரசிவர் பத்ததி
15. வருணசிவர் பத்ததி
16. ப்ரசாதசிவர் பத்ததி
17. இராமநாதசிவர் பத்ததி
18. ஈசானயசிவர்பத்ததி

## ஆன்றோர் நூல்கள்.

விக்ஞானேசுவரயோகிஸ்மிருதி பாவதீபிகை
பெருவாயின்முள்ளியார் ஆசாரக்கோவை
திருவள்ளுவர் திருக்குறள்
மறைஞானசம்பந்த நாயனர்
சைவசமயநெறிஹடப்பிரதீபிகை
ஒழிவிலொழுக்கம்
அங்காதிபாதம்
அருணந்திதேவநாயனர்
சிவஞானசித்தியார்
ஔவையார் குறள்
ஆத்திசூடி
கொன்றைவேந்தன்
மூதுரை
குமரகுருபரசுவாமிகள் நீதிநெறி விளக்கம்
நல்வழி
தத்வப்பிரகாசம்
நன்னெறி
முதுமொழிக்காஞ்சி

## முதலிய நூல்களின் வழி.

ஆங்கிலேடசுகாதார வைத்தியநூல்களும் தத்துவசாத்திரங்களு முதகரிக்கப்படும்.

## விஞ்ஞாபனம்.

உத்தம குணமிகு பத்திராதிபரே! மேலேகுறித்த நூல்களனைத்து மெனக்குக் கிடைப்ப தருமையாயுங்கிடைக்கினு மோதி யறிவதருமையாயு மிருத்தலானும் ஒவ்வொரு வகுப்பிலுங்கிடைத்த சில நூல்களைக் கொண்டு யேனையவற்றின் கருத்தை யூகித்து மிருதி புராணங்களின் உரைகளால் அநேக நூல்களின் கருத்தை யோர்ந்து அதனுலெனக் குண்டான யுக்தி அநுபவங்களைக் கொண்டெழுதத் துணிந்து உபக்கிரமிக்கின்றேன். அநேக நூல்களைத் தேடிக்கொண்டு மிருக்கின்றேன். ஆதலால் தாங்களும் தங்கள் ஞானபோதினிப் பத்திரிகைக்கு விஷயதானஞ்செய்யும் நண்பர்களுங் கூடியவரை யெனக்குதவியா மரிய நூல்கள் சம்பாதித் துதவுவார்களாகில் மிக்க நன்றி பாராட்டுவேன். அதான்று; நண்பர்கள் ஒவ்வோர் ஆசாரத்தையும்பற்றித் தங்களுக்குத் தோன்றும் அபிப்பிராயங்களையும் பிரமாணங்களையும் வரைந்தெனக்கு நேரா யனுப்புவார்களானல் வந்தனத்தோடு பெற்று எனது புத்தகத்திற் சேர்த்து வெளிப்படுத்துவேன்.

வி. சிவஞானம்.

# விவேகசாகரர்.

## 3-வது அத்தியாயம்.

சபையார்களெல்லோருந் தத்தம் மின்னேக்கிச் செல்லுங்கால், தாரை தாரையாய்ப் பெய்தமழையானது ஒப அதனேசை கொஞ்சம் கொஞ்சமாய்க் குன்றியது. அங்ஙனஞ் சத்தமும் சபையோர் குழாமுமொழிந்து தன்னவைக்களத்தி லமைதிவந்து சேரலும், நவாபு விவேகசாகரரைத் தனியாகவழைத்து, "ஐய வுத்தமரே! உமதுதிறமை யின்றுதான் எஞ்சபை யாருக்குப் புலப்பட்டது. தற்காலத்திற் கல்வியிற் கரைகண்டவ ரநேசருண்டு. ஆனல் அத்திறத்தாருட் பெரும்பாலார் தாம் கற்றதைப் பிறருக்கு விளங்குமாறுரைக்கும் வன்மைவாய்க்கப்பெருது 'இணரூழ்த்தும் நாறுமலரனையர்' ஆகின்றனர். நீவிர் கற்றகல்வியும் பெற்றவறிவுமென்னென வுரைக்க? மற்றோராலாகாதெனினும், உம் சொல்வன்மையான் சற்று எம்மனோர் உற்றறிந்தோம். இதுநிற்க, நாம்முன்னரேயே வுமக்கு வேண்டியதைக் கேட்டுப் கொள்க வென்றவாறு இப்பொழுது ஞாபகப்படுத்துகின்றோம். வேண்டியதென்ன? என்று சந்தோஷமாயுரையாடினர்.

விவேக:—ராஜாவே! யான் பணம் வேண்டிலேன், நிலம் வேண்டிலேன், பட்டமும் வேண்டிலேன். முன் நீர் 'நம்மிடமில்லாதது எது' வென்றுரைத்திரோ அதுதான் எனக்கு அவசியம் வேண்டியதாயிற்று.

நவாபு:—ஆம். நம்மிடமில்லாதது இந்நானிலத்தி லெதுதானுண்டு?

விவேக:—நும்மிடமில்லாதது ஒன்றுமில்லையோ?

நவாபு:—ஆம். தடையென்ன? அதற்குச்சந்தேகம் உளதோ?

விவேக:—ஓகோ! அப்படியா! மனப்பாக்கியந்தா னும்மிடமில்லாதது. வேறென்ன?

நவாபு:—ஹே! மனப்பாக்கியம். மனப்பாக்கியமா நாம் பெற்றிலேம்? பகலவனொளியையும் பழிக்கவல்ல வொளிபொருந்தி யுயர்ந்துவிளங்கும் ரத்தினங்களா லிழைக்கப்பட்ட சிங்காசனத்திலிருந்து, இருபுடையும் எம் குடிகளும் மந்திரி பிரதானி முதலியவருந் துதித்துக்கொண்டிருக்கச் செவ்வரசு புரிந்துவரும் நாமா மனப்பாக்கியம் பெற்றிலேம்? ஹே! நன்று மிகவும் நன்று.

விவேக:—ஆம். ஒருவன் மனப்பாக்கிய மொருவனுயர்வுக்குத்தக்க அளவாயிருப்பின் நீர் செப்பியதொக்கும். ஆனல், என்னபிப்பிராயத்திலோ, ஒருவனுயர்வடைய அவனுக்கு மனக்குறைவு முயர்வடைகிறதென்பது பொருந்தியுளது. மகாகவியாகிய மில்டனரும் "ஒருவனுயர வுயரப்பக்கத்தார்க்குப் பொருமையும் அதனலவனுக்குக் கேடு முயர்கின்றது' எனச் சாத்தான் வாயிலாக வற்புறுத்தியிருக்கின்றனர்.

**நவாபு** :—உண்மையே. ஆயினும் என் பக்கருள்ள பிரஜைகளும் ராஜாங்க அங்கத்தார்களு மெம்மிட மதிப்ரீதியும் வாஞ்சையும், நல்லெண்ணமு முடையாராதலை நீ ரறிகிலீர் போலும். இதுகாறும் அவர்கள் நம்மைத் தெய்வம்போலன்றோ கொண்டாடி வருகின்றனர்!

**விவேக** :—ஆம். ஆம். நானெல்லா முழுது முணர்ந்தவனே. அவர் தம் முகமனெல்லா முமக்கு முக்தியாய்த் தானிருக்கிறது. வேறென்ன? 'கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயி, னெல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர் - இல்லானை, யில்லாளும் வேண்டாண்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள், செல்லா தவன்வாயிற் சொல்' என்பதை யறியவில்லையோ? முழுமூடனாயினும் துன்மார்க்கனாயினும் பாதகனாயினு மவனிடம் பொருளிருக்குமாயின், அவன்பா லியாருஞ் சென்று அவனுக்குக்குற்றேவல் செய்தலியல்பன்றோ? அங்ஙனமாக, அரசனையடுத்து அவன் மொழி கேட்டு அவன் வசத்தனாகியவனைக் கொண்டாடுதலோ வியப்பாகும்? அரசன் அரசனாயிருக்கு மெல்லை யவனை யெங்ஙனமாகினும் அகமகிழ்வித்துத் தம் பயனைக் கொள்ளவே சமயம் பார்ப்பர். ஆயினும், அரசனென்பான் 'கண்ணிற் சொலிச்செவியி னோக்கு மிறை மாட்சி' யாதலான், யார் யார் எக்குறை கூறினும் தான் நீருந்தாமரையும்போலக் கலவாது மொருசார் மனத்தனாகாது, 'வித்தகமாய்க், காதி விளையாடியிருகை வீசி வந்தாலுந், தாதிமன நீர்க்குடத்தே' போல நியாயத்திலேயே கண்ணாயிருந்து பகுத்தறிந்து நீதி செலுத்த வேண்டும். ஆதலின்—.

**நவாபு** :—மிகவு முண்மையே. நிறுத்தும். யாமறிவோம். இப்பொழுது நீர் பொருள்வேண்டாமென்று சொல்லிவிட்டீர். மனப்பாக்கியமே யாம் பெற்றிலோம். பெறினும் பிறர்க்குதவ வழியின்று. நம்முடைய சமஸ்தானத்திற் பிரதான வுதவிமந்திரியாக வேனுமிருக்க மனமுடையீரோ?

**விவேக** :—அரசர் சொர்க்கமளிப்பினு மென் சுயாதீனமிழவேன். மந்திரியாதற்கு, யான் வஞ்சனை, பொய், தந்திரம் முதலிய குணங்கள் பொருந்தியவ னல்லேனாதலான், அதற்குத்தகுந்த சத்பாத்திரமும் நானல்லன்.

**நவாபு** :—அதற்கும் பிரிய மில்லையா! ஆஹா! நன்று, நன்று, இனி நீர் மற்றவரைத் தூஷிக்காமலிரும். நானே சூரியன் போல நம் நாட்டில்விளங்கித் துலங்குதலான் சந்தேகப்படவேண்டியதில்லை. நம்மதி நம்மிடந்தானே

**விவேக** :—ஆம். சந்தேகமா! நும்மதி நும்மிடந்தான். சூரியனொளி யவனிடந்தான். அதிசயமில்லை. நீர் சூரியனுக்கொப்பாயின், நீர் ராகு. கேதுக்களாலெத்தனை சமயம் பங்கப்பட்டிருப்பீர்?

**நவாபு** :—ஹா! ஹா! உமக்கு எப்பொழுதும் விகடம் பேசலும் அனர்த்தம் பண்ணலுமே வழக்கமாயிற்று. இதனையுணர்ந்தே, நாம் 'விகட

என்னும் பட்டம் சேர்த்துக்கொடுத்தோம். பின், நீர் இங்கு நாடிவந்தது தானென்னே ?

விவேக :—வேறொன்றுமன்று. எங்குங்காணுததைத்தா னிங்கு காண வந்தது. ஏனெனில் கோயிலுக்குக் கோபுரம்போற் குடிகளுக்குக் கோவாகுமென்பது கேட்டுளேன். ஆனலிங்குவந்து பார்த்தபின்பு அம்மொழி மெய்ம்மொழியோ பொய்ம்மொழியோ வென்ருயிற்று. நீர் பார்வைக்குப் பத்துப்பன்னிரண்டடி யுயர்ந்திருப்பினும், உமக்கும் மற்ற சாதாரண மனிதர்க்கு மெள்ளுப்பிரமாணங்கூடப் பேதமில்லை யெனக் கண்டறிந்தேன்.

நவாபு :—உண்மையாகவே யுருவத்திலு மங்கப்பிரமாணத்திலும் நாமு மற்ற மனிதருமொன்றே. செல்வம், சிறப்பு, அதிகாரம், கீர்த்தி யிவற்றிலோ நாமேனையரினும் பத்துப்பன்னிரண்டு அடிமட்டுமென்று பன்னூறு கெஜமே யுயர்ந்திருக்கின்றோம்.

விவேக :—கேட்பானேன். எவையாயினும் நல்வழியிற் செலுத்தப் படாவிடில் அவையே யருந்துயருளுய்த்துவிடும்.

நவாபு :—ஏது? நீர் சொல்வதை நோக்கின் நாம் நல்வழியினின்று பிறழ்ந்துவிட்டாற் போலாகின்றதே. அதென்ன அது ? சந்தேகம்.

விவேக :—ஆமாம், ஐயமென்றுமெல்லவா கூறவேண்டும்?

நவாபு :—ஓய் ! விவேகசாகரரே ! நீர் பேசுவதெல்லா மெமக்கு ஒரு கால் மகிழ்ச்சியையும், ஒருகால் வியப்பையும், ஒரு சமயம் சினத்தையும், ஒரு சமயம் கனத்தையும் விளைவிக்கின்றது. ஆதலிற் பேச்சை நிறுத்திவிடும்.

விவேக :—சமஸ்தானங்களிற்ருன் உண்மைக்கு மரியாதை கிடையாதே. இதை விவேகசாகரர் நன்ருயறிந்தவர் தாம். அந்தோ ! இதை யுணர்ந்தன்ரே, மந்திரி முதலியோர், தன்னயத்தின் பொருட்டும் அரசர் மகிழ்வின் பொருட்டும் பொய், வஞ்சனை முதலிய சாதித்தேனும் அரசர் தம்பாலராக ‘நீர் வழிப்பட்ட புணை’ யாகின்றனர்.

இவ்விதமாகக் குறிப்பாயும் வெளிப்படையாயுங் குத்திக்குத்தி வாங்குந்தன்மையான சம்பாஷணைக்கோ நவாபு மனம் படைத்திலர். அப்படியாக, விவேகசாகரர் பளிங்குபோன்ற களங்கமில் மனத்தாராதலான் நவாபு பிறரைத் தூஷிக்கப்படாதெனினு மவர்குற்றங்களைக் கூறிக்கொண்டேயிருப்பவராகின்றனர். கடைசியாய், நவாபு கடுங்கோபங் கொண்டு ‘நீர்போய் விடுமென்று’ சொல்ல, விவேகசாகரர் ‘போனற் ருனென்னே ?நானீயே’ யென்று மறுமொழிதந்து நின்றனர்.

நவாபு :—ஹோ! ஹோ! இது என்ன, போக்கடாத்தனமோ ? நானீயா?

விவேக :—ஆம். ஆம். நானீயே. நானீயே தான். சந்தேக மென்ன ? நவாபுவோ இது கேட்டலும் மண்டெரியில் மண்ணெண்ணெய் வார்த்தாற்

போலாயினர். திடீரெனத்தன் உடைவாளை யுருவிக்கையிற் பிடித்து ஓங்கிக்கொண்டு 'போய் விடும். இன்றேல், நீரிதற்கே பலியாவீர்' என்று வீசவாரம்பித்தனர். வேறென் செய்வர்? அவரோ பழிக்கு அஞ்சாப் பச்சைப் பட்டாணி. ஆயினு மிதுவனா நற்குண மமைந்தவ ராதலாற் பொறுத்துப்பார்த்தனர். விவேகசாகரரோ போவெனப்போகிலர். கொடுப்பதைக் கொள்ளுகிலார். வாயை மூடியுமிருக்கின்றிலர் நவாபுக்கு இவர் உடும்பு போலாய் விட்டனர்.

இதனையறிந்து விவேகசாகரர் திடுக்கிடா நெஞ்சராயினும் பயந்தவர் போற் பாவனை செய்து கொண்டு, "மகாராஜாவே! பொறும். பொறும். கோபம் பாபம், பாபம் பழி, கோபத்தாற் கெட்டவர் அநேகர். 'கோபத்தாற் கௌசிகன்றவத்தைக் கொட்டினன், கோபத்தானகுடனுங் கோல மாறினன், கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினன், கோபத்தா லிறந்தவர் கோடி கோடியே" என்பதை நோக்கும். 'நானீ' என்பதன் பொருளுணர்ந்த பின்பு என்சிரசைத்துணித்து விடும். எனக்கும் சம்மதந்தான் என்றனர்.

'அர்த்தமென்ன அர்த்தம்! நான் (விவேகசாகரன்) நீ (அரசனாகியநான்) என்பது தானே. வேறென்ன? அதாவது நானும் நீரும் சமமென்று சொல்லிவிட்டீர். அதுதானே?' என்று நவாபு சீறிச்சீறிக் கூறினர்.

'அப்பா! என்னத்தைச் செப்ப? அப்படியா அர்த்தம்? நானீயென்றால் நான் (விவேகசாகரன்) ஈ (அற்பஜெந்துவாகிய ஈ) ஆகுவேன் என்பதுபொருள். அதாவது நான் ஈக்களைப்போன்று தரத்தத்தரத்த வந்து கொண்டேயிருப்பே னென்பது தான். ஐய! வேண்டுமென்றால் கொன்றுவிடும்' என்று மிகவும் பணிவுடையார்போற் பகர்ந்து நிற்க, நவாபுமிகவும் வெட்கப்பட்டு, 'ஆகட்டும். நீரியாயின் நாளைக்கு ஈக்களோடு வந்து சேரவும். இல்லா விட்டால், இதற்கு இரையாகு முமது சிரம்' என்று வற்புறுத்திக் கூறி விடை கொடுத்தனுப்பினர்.

(இன்னும் வரும்)

தே. ச. ஆண்டியப்ப பிள்ளை.

## புத்தகக் குறிப்புக்கள்.

**அன்னி பெஸண்டு சரித்திரம்:**—இஃது ஒன்பான்வகைய விருத்தங்கள் 76 கொண்டது; மன்னார்குடி வெஸ்லியன் மிஷன்காலெஜ் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் பி. ஆர். கிருஷ்ணமாசாரியாரென்பார் செய்தது; மதுரைத்தியசாபிகல் சங்கத்தாரது வேண்டுகோட்கிணங்கிச் செய்யப்பட்டது. 12-பக்கங்களுள்ளது; இதன்விலை அணா - $1\frac{1}{2}$, தபாற்கூலி பிரத்தியேகம். நமது அன்னி பெஸண்ட் அம்மை யவர்களைச் சின்னாட்களின் முன்னர் அடையாற்

திற் பிரசங்கிக்கக்கேட்ட யாம் இந்நூல் போலும் பல்லாயிரக் கணக்கான நூல்கள் அவ்வம்மை விஷயமாக வியற்றப்பட்டினும் அவை யனைத்தையும் விரும்பா நிற்பேம். இதுநிற்க. இனியிதன் குணா குணங்களைப்பற்றிச் சிறிது பேசுவோம்:—இவர் பாக்களனைத்தும் இடர்ப்படுதலின்றி யினிது செல்கின்றன வெனினுஞ் சொற்செறி விலவாம். சில பாடல்களிற் பத ஜாலங்கள் செய்துள ரெனினும் இவர் சங்கச் செய்யுளில் அதிகப் பழக்க மிலார் போலும் காணப்படுகின்றனர். கடவுள்வணக்கப் பாடலின் மூன்றா மடியிற் சொல்லானந்தமும் மோனைப் பிறழ்வும், இரண்டாம் பாடலிற் பொருத்தமி லுவமையும், நான்காஞ் செய்யுளின் றொடக்கத்திற் சந்தச் சிதைவும், பத்தாங்கவியிற் பொருட்டெளி வின்மையும், பான்மயக்கமும் பதினோராம்பாட்டி லொருமைப் பன்மை யுறழ்ச்சியும் 'நாலாட்டின் பருவம்' 'ஒவ்விய', 'மீட்டுதற்கு', 'அருள்விக்கும்' என்பனவாதிய வழக்காறல்லாச் சொற்பிரயோகமும், பத்தொன்பதாங்கவியின் மூன்றாமடியிலிழுக்கிய மோனையும், இருபதாம்பாட்டில் 'தம்' என்பதைத் 'தன்' என்றதும், இருபத்தோராம்பாட்டின் முதலடியிற் 'சென்றவெழில்' என்றசொல்லானந்தமும், 'திவ்வியசொல்' 'கனித்திரயம்' என்றற்றொடக்கத்த இழிதொடர்ப் பிரயோகமும், சமயத்திற்சேற்ற சொற்பெய்யாமையும், சந்தவிருத்தவியல்புணராமையும் 'பார்க்கலாது' என்பதுபோன்ற சொல்வழூஉவும், 'நிறம்பி' 'கனித்து' என்பனமுதலான அச்சுப்பிழைகளும், வாழிகூறும்பாவில் மூன்று பெரியயாப்புப் பிழைகளுமாகிய இன்னோரன்ன பல்வகைவழூஉக்கட்கு மிலக்கியமாய்நின்று மிளிருமிதற்கு இத்துணை யாரவாரமென்? வாழ்த்துச் செய்யுளில் அன்னிபெஸண்டு அம்மை பெயரைத் தக்கவாறு அமைக்கவறியாது பெரிதுமிடர்ப்பட்டு 'இழுக்குடையபாட்டிற் கிசைநன்று' என்றபடி யிசையிலிழுத்துப் படித்துப்பாடிப் பாட்டுடைத் தலைவியார்மாட்டுப் பெருவசை யிழைத்துளர். அந்தோ! செந்தமிழ்ப்பாண்டிநாட்டின் றலைநகரே! உண்மைகாண வேண்டி 'நாயகன் கவிக்குங் குற்றநாட்டிய கழகமாந்தர் மேய' நற்றலமே! நீயோ இத்தகைய போலிநூல்களையெல்லாந் தலையிற்கொண்டு கழிபெருங் களியாட்டயர்வது? தகாது! தகாது!!

**திருவிடைமருதூர்க் கலம்பகம்**:—இது திருவெவ்வுளூர் இராமசாமிச் செட்டியாரவர்கள் இயற்றியது; 44-பக்கங்களுள்ளது; இதன்விலை அணா-2. இந்நூலாசிரியர் ஏறக்குறைய 40-பதிகங்களும் பல சித்திரக்கவிகளும் விடுகவிகளும் கீர்த்தனங்களும் தோத்திரங்களும் முதலாயின பல சிறு நூல்களும் தாமேபாடி அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கின்றனர். இந்நூலையிவர் பாடுதற்கட் சுதந்தரயூகமுங் கற்பனைத்திறனும் பெரிதுங்காட்டி யிருக்கின்றனர். கலம்பகவுறுப்புக்கள் பதினெட்டனையு மெடுத்தமைப்பதனோடு சில புத்துறுப்புகளுஞ் சேர்த்து யாத்துளர். இது நல்ல பளபளப்புள்ள கடிதத்தில் அச்சிடப்பட்டுளது.

**முனிமொழிப்பிரகாசிகை** :—இது கிறிஸ்டியன்காலேஜ் தமிழ்ப்பண்டிதர்களுளொருவராகிய நாகைப்பட்டினம் வேதாசலம்பிள்ளையவர்கள் எழுதியது ; இது "தேவர்குறளும்" என்னும் ஔவை திருவாக்கிற்போந்த 'முனிமொழியும்' என்னுந் தொடர்க்குக் கோப்பாய் சபாபதிநாவலரவர்கள் கூறிய பொருளை நியாயவாயிலான் மறுத்துரைப்பது ; செவ்விய தமிழ்வசனநடையிலமைந்துளது. இதன்விலை அணா-1.

**விவேகசரித்திரம்**:—இப்பெயரியநூல் ஆக்கியோர் தமிழ்ப்பண்டிதர் தி. கோ. நாராயணசுவாமி பிள்ளையென்பவர். இவ்வாசிரியரே **விநோதசரித்திரம்** முதலிய ஜனானுகூலமான நூல்கள் பல இயற்றியிருக்கின்றார். கதை சொல்லும் விஷயத்தில் மிகுந்த சாமர்த்தியமும், கதை வாயிலாகவே நீதிகளைப்புறத்தே காட்டிப்புகட்டலும் இவ்வாசிரியரிடத்து விசேஷமாகக் காணப்படுகின்றன. இந்நூலினாலறியக்கூடிய நீதிகளைத்தொகுத்துக் கூறலாமென்று உத்தேசித்துச் சிரமமெடுக்க வேண்டுவதநாவசியம், ஏனென்றால், ஆசிரியர் தாமே தமது நூன்முகத்து இரண்டாம் பகுதியில் அவைகளை விளக்கமாயும் விரிவாயும் காட்டியிருக்கின்றார். மற்று, இந்நூலானது, 'விவேகன்' என்னும் ஒரு புருஷன் தனது வாணாளில் நடந்த பெரும்பான்மை விஷயங்களைத்தானே கண்டறிந்த வண்ணமும் தான் பிறர்பாற் கேட்டறிந்த வண்ணமுமாகப் பிறர்க்கறிவுறுத்து மாதிரியாக எழுதப்பட்டிருக்கின்றது. இத்தகைய நூல்கள் ஆங்கிலத்திற் பலவுள. கதையில் நிகழும் விஷயங்கள் சாதாரணமாய் உலகில் நிகழ்வனவே. நாடகவழக்கினைப் பின்பற்றியதாயி னிக்காலத்திற்குப் பொருந்தாதாய்விடும். விவேகனுடைய சித்தவுறுதியும் அன்புடைமையும் அருளுடைமையும், ஆபத்சகாயருடைய பெருந்தன்மையும் மனத்திடமும் விதரணியினது இல்லறதருமவறிவும் நல்லொழுக்கமும் நன்கு தெரிக்கப்பட்டன. விதேகனுக்கு அந்தியகால வாழ்வு முந்தியகாலவாழ்க்கையின் பயனென்பதும் கௌரியம்மையின் இடையிட்டுவந்த கஷ்டம் அவளது சிரந்த குணத்தை வெளிப்படுத்தற்கும் எத்திறத்தோராயும் ஊழ்வாட்டுமென் றறிவித்தற்குமே நிகழ்ந்ததென்பதும் விளக்கமுறக் கிளக்கப்பட்டன. முத்தனது மூடத்தனத்தின் லக்ஷணமும் சிறிது கல்வியேற அவனிடத்து நிகழ்ந்த செயலும் கல்வியின் பயனைக் கரதலாமலக மென்னக் காட்டா நின்றன. கல்வி, நீதிசாரம், கல்வியும் செல்வமும் என்பவற்றைப்பற்றி விரிந்த உபந்நியாசங்களும், தமிழ், தத்துவோற்பத்திலயம், ஒற்றுமை, நல்லினஞ்சேர்தல், நலம் என்பனவற்றைப்பற்றிச் சுருங்கிய உபந்நியாஸங்களும் நூலகத்துக் காணப்படுகின்றன. 'கல்வி' யுபந்நியாஸத்தில் பேகனாரென்னும் ஆங்கில நூலார்வாக்கியங்கள் பல மொழிபெயர்ப்பு வாயிலான் எடுத்தாளப்பட்டன. 'தமிழ்' உபந்நியாசத்தில் அமிர்தமென்னும் ஆரியத்தின் சிதைவாய தமிழென ஞானமூர்த்தி சாற்றலின் அவ்வாறொரு கொள்கையு முண்டென்றறிகின்றோம்.

நீதிசாரத்து அகங்காரத்தைக் கிழங்ககழ்தலையே பிரதானமாக கூறுதல் தக்கதே. தத்துவோற்பத்திலயம் வேதாந்த சாத்திரங்களைப்பற்றியது. நீதிசாரத்தையும் தத்துவோற்பத்திலயத்தையுங் குறிக்கொண்டு கேட்ட விதேகன் அவற்றைப்பிறர்க்குச் சொல்லுமதுகை பெற்ற பின்னரும் தற்கொலை செய்து களேபரங்களைதல் மனத்தில் உறுதியூன்றிப் பக்குவமுதிர்ச்சி வந்தாலல்லது வேதாந்தக் கேள்வி பெரும் பயன்றராதென்பது குறித்தது போலும். உபந்நியாசங்களிலெல்லாம் தருக்க நெறியால் விவகரிக்கு மாற்றலும் நீதிகளைக்கதைவழியாற் கற்பிக்கு முறைமையும் செவ்வனே காணலாம். தலப்பெயர்கள் எண்ணிக் கூறுதற்கண் முறையொன்று பற்றப்படாமை குறையென்று கூறலாம். ஆபத்சகாயர் சோதிட சாஸ்திரப்பயனை மறுத்தல் நியாயவழியா னுகின்றமையின் யாவரு மேற்கொள்ளற்பாலது. பெண் கல்வியை நிதரிசனவாயிலானும் விதிவாயிலானும் வற்புறுத்தல் முறைப்பட்ட தொன்றே. கௌரிக்கும் சௌரிக்கும் சம்பாஷணை துன்னருஞ் சுவைத் தாயமைந்துளது. தமிழ் இலக்கியங்களுட் காணப்படும் அநேக அருஞ்செய்யுள்கள் உதாரணத்திற்காகவும், மேற்கோளிற்காகவும், நூனடையிற்சேர்த்தும் பிரயோகிக்கப்பட்டன. அநேக பழமொழிகள் சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறுபயோகிக்கப்பட்டு நூற்பொருள் விளக்கமும் மனக்கட்களிப்புந்தருகின்றன. நூல் எழுதப்பட்ட வாசகநடை, திரிசொற்கள் பெரும்பான்மை பயிலுதல் பற்றியும், இலக்கணப்பிரயோகங்கள் நிரம்ப ஆட்சிப்படல் பற்றியும் சாமானியர்க்கன்றோ என ஐயமெழுப்பும். நடையும் ஒரு தன்மைத்தன்றி நாநாவிதமாயிருக்கின்றது. ஆயினும் வனப்புக்கள் மிகுந்து வாக்கியங்கள் இன்னோசைப்பட்டு நடக்கின்றன. அன்றியும், வசனநூல்கள் தமிழிற்பல ஏற்படினல்லது ஒவ்வொரு நூலும் ஒருதன்மையினையே குறித்தியங்குதல் கூடாது. அவ்வாறியங்கலு மிக்காலத்தாகாது. குதி குலித்து சொற்பனம் முதலிய பிழைபாடுற்ற மொழிகளும், அநுகூலள், நித்திரித்து, அர்த்தித்து முதலிய நவீன பிரயோகங்களும், உழை, வயின், அன்றுஎன்னும் சொற்களும் உபயோகிக்கப்பட்டனவெனக்கூறலாம். எனினும் இவை யொழிந்த பாகங்கள் சாலச்சிறந்தனவாம். நூலாசிரியரிடத்து கதை சொல்லுஞ் சாமர்த்தியம் யாம்முற்கூறியவாறே சிறந்து காணப்படுகின்றது. எத்துறைக் கல்வியும் இவரது நூல்களின்றுறையிற் காணலாம். தருக்கம், இலக்கணம், லௌகிகம், வேதாந்தம், ஒழுக்கம் முதலிய கலைகளின் சாரங்களெல்லாம் ஆண்டாண்டெடுத் தாள்கின்றார். நூலினைப் படிப்போர் முயற்சியின்றி யறிவுபெறுதல் ஒருதலையென்பதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை.

---

## சமாசாரங்கள்.

**சென்னைச் சர்வகலாசாலைப் பிரவேசபரீட்சை**:—யாம் முன்சஞ்சிகையிற் குறித்ததுபோலப் பிரவேசபரீட்சைக்கு மறுபரீட்சையொன்று செய்யப்படல்வேண்டுமென்று ஏற்பாடாய்விட்டது. அதன்கண் இரண்டாம் பாஷைகளாகிய தமிழ் வடமொழி தெலுங்கு முதலியனவொழிந்த பிற பாடங்களிலேயே மாணாக்கர் பரீட்சிக்கப்படுவர். அப்பரீட்சையும் ஏறக்குறைய மார்ச்சுமீ த்தின்றொடக்கத்திலிருக்கலாம். தமிழ் முதலாயினவற்றிலும் பரீட்சைகளிருக்குமாயின் பரீட்சையான உடனே பாடபுத்தகங்களைக் கவனியாமலுங்கிழித்து மெறிந்துவிட்ட மாணாக்கர்கள் என்னபாடுபடா நிற்பர் என்பதை யாவருஞ்சற்று யோசிக்கவேண்டும். இனியித்தகைய குறைபாடுகள் நிகழாதிருக்குமாறு யாவரும் நடந்துகொள்ளவேண்டும்.

**ஜான் ரஸ்கின் துரையவர்கள்**:—இவர் இந்தமாதத்தில் ஒருவாரத்திற்கு முன் இங்கிலாந்தில் தேகவியோகமாயினரென்று கேள்வியுற்று மிகவும் விசனப்படுகின்றோம். அவர் இனிய ஆழ்கருத்துடைய ஆங்கில வாசகநடையெழுதிய புலவர்பிரான். மக்களுயிர்வாழ்க்கை நலத்தைப் பெரிதுங்கருதியுழைத்து வந்தமாபுருடரென்பது அவரெழுதிய 'பார்ஸ்கிளாவிஜீரா' அல்லது 'தொழிலாளிகட்கெழுதிய நிருபங்கள்' என்பதனாலறியப்படும். அவர் சித்திரசாஸ்திரமும்சிற்பநூலும் கைவந்தவரென்பதும் அவற்றின்முகமாகமாந்தர்க்குப் பலவிதநீதிகளும் அறிவுறுத்தாரென்பதும் அவர்செய்துள 'தற்கால சித்திரக்காரர்கள்', 'இல்புனைநூலினேழுவிளக்குக்கள்' என்றநூல்களாலினிதுவிளங்கும். கைத்தொழில் கெட்டுலைந்து சனங்கள் வறுமையுற்றதற்கும் இதுபோலும் பிறதீங்குகட்கும் மூலகாரணமாவன நாடோறும் புதிதுபுதிதாகக் கண்டுபிடிக்கப்படும் யந்திரங்களேயாம். அவைசெய்வோனது புத்திசாதுரியத்தை விளக்கியும் பெருமுதற்போடுவோனுக்கு மிக்கலாபம் பயந்தும் உதவுவனவெனினும் பொதுநோக்காகப் பார்க்குமிடத்து நாட்டின் சுகசீவனத்திற்குப் பேரிடையூறுகளாமென்பது அவருடையகொள்கை. மேலுமிவர் நல்லொழுக்கமும் தத்துவஞானமும்பரோபகார சிந்தையுமுடையவர். இவருக்குவயது 80-க்குமேலாம்.

**புதுவருட மரியாதைகள்**:—இவ்வருடம் சென்னை இராசதானியிற் கனம் பொருந்திய உயர் நீதிஸ்தலத்து நியாயாதிபதி பிரமஸ்ரீ எஸ். சுப்பிரமணிய ஐயரவர்களுக்குக் கே. ஸி. ஐ. இ. பட்டமும், வன்பாக்கம், ஆக்டிங் அட்வொகேட் ஜெனரல் ஸ்ரீ பாஷியமையங்காரவர்கட்கு 'நைட்' பட்டமும் கொடுக்கப்பட்டன.

**திரான்ஸ்வால் யுத்தம்**:—இப்பொழுது நடந்து வாராநிற்கும் இப்போரின்கண் 'ஏர்ல் ஆப் ஆவா' என்ற பட்டப்பெயர் பெற்ற லார்ட் டப்பரின் துரையவர்களது மகனார் காலஞ்சென்றனரென்பது கேள்வியுற்ற யாம் மிகவும் விசனப்படுகின்றோம்.